Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 06 சனிக்கிழமை (21.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 294
















# குடாநாட்டிற்கு விரைவில் 24 மணிநேர மின்விநியோகம்

## அமைச்சர் பசில் உறுதியளிப்பு

(கைதடி)

குடாநாடு உட்பட வடக்கில் தொடர்ச்சியாக மின்சாரம் தடைப்படுவதனை நாம் அறிவோம். இந்தக் குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் தற்போது வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே வடபகுதி முழுவதற்குமான 24 மணி நேர மின்விநியோகம் விரைவில் கிடைக்குமென அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தை நேற்றைய தினம் திறந்துவைத்தபின் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

குடா நாட்டில் தொடர்ச்சியாக மின்சாரம் தடைப்படுவதை நாங்கள் அறிவோம். இன்றும் இதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கும் கிளிநொச்சியில் இருந்து சுன்னாகத்திற்குமான தேசிய மின்வழங்கல் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியலோடு பனை வளம் பின்னிப் பிணைந்துள்ளதால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பனை மரங்களை நடுகின்ற வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம்.

யுத்தம் முடிவடைந்ததற்குப் பின்னர் யாழ்ப்பாண நூலகத்தில் நடைபெற்ற முதலாவது அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்திற்கு



இணங்க பருவ மழைக்கு முன்னரான காலப்பகுதியில் பாரிய அளவில் பனை மரங்களை நடுகை பண்ணும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இந்த அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பனை மரத்தில் இருந்து உற்பத்தி செய்கின்ற பொருட்களை தரம் வாய்ந்த பொருட்களாக மாற்றுவதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பனை சார் உற்பத்திப் பொருட்களுக்கான சிறந்த வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பனை ஆராய்ச்சி

(19) ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் சம்பவம் விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

மன்னார் நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் மன்னார் நீதிமன்ற வளாகம் சேதமாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்கள் குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுக்கு உத்தரவிட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆளும் கட்சியின் அமைச்சர் ஒருவர் தம்மை அச்சுறுத்தியதாக மன்னார்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்கரைப் பகுதியில் இருந்து 53 வயதுடைய ஆணின் சடலம் இளவாலைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் பொதுமக்கள் குறித்த சடலத்தைக் கண்டு இளவாலைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து நேற்று மதியம் 12.00 மணியளவில் இளவாலைப் பொலிஸார் சடலம் இருந்த இடத்திற்குச்

(19) ஆம் பக்கம் பார்க்க

# காங்கேசன்துறைக்கு யாழ்தேவி 2014 முற்பகுதியில் சேவையில்

## இந்தியத் தூதுவர் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கான ரயில் சேவை 2014 ஆம் ஆண்டு முற்பகுதியில் இடம்பெறுவதற்கான வகையில் ரயில் பாதை புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதாக இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். ரில்கோ விடுதியில் நேற்று ஆரம்பமாகிய யாழ். பல்கலைக்கழக ஆய்வு மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் வடபகுதி ரயில் பாதை புனரமைப்பிற்காக 18 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளோம்.

இந்த ரயில் பாதை சீர்படுத்தல்கள் மிகவும் சிறப்பாகவும் முன்னேற்றகரமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே 2014 இன் முற்பகுதியில் யாழ்தேவி ரயில் சேவை மீள ஆரம்பிக்கப்படும். இதற்கமைவாக பளைக்கும் காங்கேசன் துறைக்குமிடையிலான ரயில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# பனை ஆராய்ச்சி நிலையம் கைதடியில் திறப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட கைதடி பனை ஆராய்ச்சி நிலையம் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் திறந்துவைத்தார்.

1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த பனை ஆராய்ச்சி நிறுவனம் 1995 ஆம் ஆண்டு வரை தனது சேவையை வழங்கி வந்தது. 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வைத் தொடர்ந்து இந் நிறுவனம் செயலிழந்தது. தற்போது இந்திய மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்றைய தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# நிமலரூபனின் சடலத்தினை வவுனியாவில் அடக்கம் செய்ய அனுமதி

(கொழும்பு)

வவுனியா சிறைச்சாலையிலிருந்து மகரகம சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் அடிகாயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் தமிழ்க் கைதி நிமலரூபனின் சடலத்தை வவுனியாவில் அடக்கம் செய்வதற்கு உச்சநீதிமன்றம் நேற்றைய தினம் அனுமதியளித்துள்ளது.

நிமலரூபனின் இறுதிச்சடங்குகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாதவாறு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்பின்கீழ் நடக்க வேண்டும் என்ற நிபந்தனையின்பேரிலேயே இந்த அனுமதியை உச்சநீதி மன்றம் வழங்கியுள்ளது.

நிமலரூபனின் சடலத்தை மகர பிரதேச எல்லைக்குள் தான் அடக்கம் செய்யவேண்டும் என்று மகர நீதவான் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.

எனினும் தமது மகனின் சடலத்தை தமது சொந்த ஊரான வவுனியாவில் தான்

(19) ஆம் பக்கம் பார்க்க

# முடங்கியது நீதித்துறை

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் நீதவான் மீதான அச்சுறுத்தல் நீதிமன்ற செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் தலையீடுகள் என்பவற்றைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் சட்டத்தரணிகள் மேற்கொண்டு வரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக நீதிமன்ற செயற்பாடுகள் நேற்றைய தினம் இரண்டாவது நாளாகவும் முடங்கியுள்ளன.

(19) ஆம் பக்கம் பார்க்க

# கடற்படையினர் விடுவித்தால் மயிலிட்டித்துறை புனரமைப்பு


## கூட்டமைப்பிடம் இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

மயிலிட்டி இறங்குதுறையை கடற்படையினர் விடுவித்தால் அதனை இந்திய அரசாங்கம் புனரமைத்து கொடுக்கும் என இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் அழைப்பில் யாழ்ப்பாணம் வந்த அசோக் கே.காந்தாவுடன் நேற்று மாலை 6.00 மணிக்கு ரில்கோ ஹொட்டேலில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோர் சந்தித்து உரையாடிய வேளையிலேயே அவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வலி.வடக்கில் மீள் குடியேறவுள்ள மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன



(வலி.வடக்கு)


வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இது வரை மீளக்குடியேறாத மக்களை அந்தப் பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்வதற்கு அவர்களுக்குத் தேவையான வாழ்வதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று தெல்லிப்பளை வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் கலந்து கொண்டு மீளக்குடியேறவுள்ள மக்களுக்கான உதவிகளை வழங்கி வைத்தனர்.

வலிகாமம் வடக்கின் வித்தகபுரம், கொல்லங்கலட்டி, தந்தை செல்வாபுரம், மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, வீமன்காமம், குரும்பசிட்டி கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

முதற்கட்டமாக 5 தற்காலிக கொட்டகைகளும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 12 கூரைத் தகடுகளும் அத்துடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விவசாய உபகரணப் பொதியும், இரண்டு தென்னம்பிள்ளைகளும் வழங்கப்பட்டன. (02)

# நுளம்புக்கு புகலிடம் அளித்தவர் நெல்லியடியில் சிக்கினார்



(கரணவாய்)

நெல்லியடி பெற்றோல் நிலையத்துக்கு பின் பக்கமாகவுள்ள வீட்டுக் காணியில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் குப்பைகள் கிடப்பது நெல்லியடிப் பொலிஸாரினால் அவதானிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறாக கவனிப்பாரற்றுக் கிடக்கும் காணிகளில் குப்பைக் கழிவுகள் கொட்டப்படுவதால் டெங்கு நுளம்பு பரவுவதற்கு வாய்ப்பாக உள்ளது.

இதனால் இவற்றை உடனடியாக அப்புறப்படுத்துமாறும், இல்லையேல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் வீட்டு உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (18)

# கனகரத்தினம் மகாவித்தியாலய விடுதிகள் நாளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட ஆண்கள், பெண்கள் விடுதித் திறப்பு விழா நிகழ்வு நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே.என்.. டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும்,. கௌரவ விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில், மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (60)

# நல்லிணக்க வாரம்

(பருத்தித்துறை)

தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சினால் இவ்வாரம் 22ஆம் திகதி வரை சமூக நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு இவ்வாரத்தில் சகல வலயங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு மும்மொழிக் கோட்பாடுகளை வாசிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சமூக நல்லிணக்கமும் அதன் முக்கியத்துவம் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு அறிவுறுத்தும் வெளிப்பாட்டுக் கூற்றை நாளை சகல பாடசாலைகளிலும் தரம் 6 ,இற்கு மேற்பட்ட மாணவர்கள் ஊடாக வாசிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# கலந்துரையாடல்

(புதுக்குடியிருப்பு)

கடன்வழங்குவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. புனர்வாழ்வு முகாங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (138)

◇ ◇ ◇ ◇ ◇ ◇

பட்டதாரி பயிலுனர் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பித்த யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரி பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பட்டதாரிகள் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

நியமனம் தொடர்பாக அவசரமான கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதால் விண்ணப்பித்த அனைத்துப் பட்டதாரிகளையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு பட்டதாரிகள் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்

# வன்னி, தீவக பகுதிகளுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வன்னி மற்றும் தீவகப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றித் தமது சேவைக்காலங்களைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு நிரந்தர இடமாற்றம் ஓகஸ்ட் மாத முதலாம் திகதியில் இருந்து வழங்கப்படும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் அண்மையில் வடமாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளருடன் இடம்பெற்ற இடமாற்றசபைக் கூட்டத்தில் கல்வியியற் கல்லூரிகளில் இருந்து நியமனம் பெறும் ஆசிரியர்கள் வன்னி மற்றும் தீவகப் பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்டதும் சேவை நிறைவு பெற்ற 107 ஆசிரியர்கள் தாங்கள் கோரிய இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ள முடியுமென முடிவெடுக்கப்பட்டது.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களை தம்மோடு தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளுமாறும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# வருடாந்த மஹோற்சவம்

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்கா ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

30 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவத் திருவிழாவும் சிறப்பு உற்சவங்களாக நடைபெறவுள்ளன. (60)

# இன்றும், நாளையும் குடாநாட்டின் மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அழுத்த மின் மார்க்கங்களை இணைப்பதற்காகவும் இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், மீசாலை, அல்லாரை, மந்துவில், வரணி, உசன், மிருசுவில், பளை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டார்தெருப் பிரதேசம், கோம்பயன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்ச்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர், யாழ்.பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், சாமியன் அரசடி, கலிகை, தாமரைக் குளத்தடி, யாக்கரு, கிழவிதோட்டம், துன்னாலை அடங்கலான கரவெட்டிப்பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், கந்தர்மடப் பிரதேசம், யாழ்.நகரம் முழுவதும், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டார்தெருப் பிரதேசம், கோம்பயன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர், உடுப்பிட்டி தொடக்கம் தொண்டைமானாறு வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# க.பொ.த உயர்தரப் பரீட்சை அறிவுறுத்தற் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ.த) பரீட்சை 2012 (பழைய, புதிய பாடத்திட்டத்திற்கமைவான) யாழ்ப்பாண வலயம் (கோப்பாய் கோட்டம் தவிர்ந்த) தென்மராட்சி வலயம் மற்றும் தீவக வலயத்தை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் I இற்குரிய அறிவுறுத்தற் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் மேற்படி பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சை இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார்.

# யாழில் இன்று இலவச சட்ட ஆலோசனை

யாழ்ப்பாணம் சட்ட உதவி ஆணைக்குழுவினால் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சட்ட முகாம் ஒன்று யாழ்ப்பாணப் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று மாலை 2.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பொதுமக்கள் தங்களது சட்டப்பிரச்சினைகள் (குடும்பம், காணி மற்றும் தொழில்) தொடர்பான இலவச ஆலோசனைகளை சட்டத்தரணிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.


# பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

புற்றளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 8.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளதுடன், பரிசில்களை திருமதி ராஜராஜேஸ்வரி சத்தியசீலன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (109)

# பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியின் தேவைகளை நிறைவேற்ற உடன் நடவடிக்கை



(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் அணிவகுப்புக்கான இசைக்கருவிகள் மற்றும் பிரதான மண்டபத்திற்கான கதிரைகளைப் பெற்றுத் தருவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி மொழி வழங்கியுள்ளார்.

வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதியினை திறந்துவைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பாடசாலைச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இக் கல்லூரியின் அணிவகுப்புக்கான இசைக்கருவிகள் பெற்றுத்தரப்படும் அதேவேளை பிரதான மண்டபத்திற்கான கதிரைகளைப் பெற்றுத்தருவதற்கும் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் ஏனைய கோரிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றார்.

நூற்றாண்டைக் கடந்து 185 வருடங்களாக கல்விச்சேவை செய்துவரும் பாடசாலைகளில் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும் ஒன்றாகும். கல்விக்குப் பெயர்போன வடபகுதியில் கடந்த காலங்களில் நாட்டில் அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வியிலும் பெரும் வீழ்ச்சி காணப்பட்டது.

இருந்தபோதிலும் மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட கல்விமான்களை இப்பாடசாலை உருவாக்கி பெருமை பெற்றுள்ளது.

அந்தவகையில் புதிய கட்டடத்தை அமைத்துத்தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜ பக்ஷ அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்த அமைச்சர் அவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தி மாணவர்கள் சிறந்த நற்பிரஜைகளாக சமூகத்தினதும் நாட்டினதும் மேம்பாட்டிற்காகவும் உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

முன்பதாக பாடசாலையின் பிரதான வாயிலிலிருந்து மாணவர்களின் இசை அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்ட அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் பிரதான நிகழ்விடத்தை வந்தடைந்ததும் அங்கு நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய கட்டடத்தினை அமைச்சர் திறந்துவைத்தார். பாடசாலை அதிபர் திருமதி. செல்வமலர் சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் அமைச்சர் உள்ளிட்ட அதிதிகள் பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஜெயசீலன் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் (றங்கன்) உள்ளிட்ட துறைசார்ந்தோர் பலரும் உடனிருந்தனர்.

## ரமழான் நற்சிந்தனை



ரமழான் நோன்பின் நோன்பு திறக்க
ஒரு நோன்பாளிக்கு ஒரு பேரீச்சம்பழம்,
ஒரு மிடறு தண்ணீர் அல்லது ஒரு மிடறு பால்
கொடுத்து நோன்பு திறக்க உதவியவருக்கு
அல்லாஹ் பெரும் அருட்கொடைகளை
வழங்குகின்றான் -ஹதீஸ்-

(105)

## வீடு உடைத்து திருடிய நபர் விளக்கமறியலில்

(திருநெல்வேலி)

வீடு உடைத்து திருட்டில் ஈடுபட்ட ஒருவரை யாழ்.நீதிமன்றில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் வீட்டுக்காரர் கடந்த புதன்கிழமை அடையாளம் காட்டினார்.

இருபாலை, கோப்பாய் வீதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த மாதம் 29ஆம் திகதி முப்பது இலட்சத்து எண்பது ஆயிரம் பெறுமதியான நகை மற்றும் பணம் என்பவற்றைத் திருடியதாக நபர் ஒருவர்மீது குற்றம் சாட்டப்பட்டு கோப்பாய் பொலிஸாரினால் யாழ்.நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார். இவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டதையடுத்து யாழ்.சிறைச்சாலையில் இவர் வைக்கப்பட்டிருந்தார்.

சிறைச்சாலையிலிருந்து அன்றையதினம் இவர் கூட்டிவரப்பட்டு யாழ்.நீதிமன்றில் அடையாள அணிவகுப்பு இடம் பெற்றது. உத்தியோகப் பற்றற்ற நீதிவான் க.கேசவன் முன்னிலையில் நடைபெற்ற இவ்வடையாள அணிவகுப்பில் வீட்டுக்காரரினால் இந்நபர் அடையாளம் காணப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 26ஆம் திகதிவரை சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (137)

## வரணி வடக்கு பிரதேசத்தில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரிப்பு

(வரணி)

வரணி வடக்கு பிரதேசத்தில் கடந்தவாரம் மூன்று திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வரணி கும்பிட்டான் புல பூசகரின் ஒரு தொகைப் பணம் ஆலயத்தில் திருட்டுப் போயுள்ளது. மற்றும் தம்பான் பகுதியில் உள்ள ஆட்களற்ற வீடொன்றில் உள் நுழைந்த திருட்டுக் கும்பல் வீட்டிலிருந்த கணினி மற்றும் பணம் என்பவற்றை திருடிச்சென்றுள்ளனது.

இதேவேளை கறுக்காய் கந்தப் பெருமான் ஆலய பூசகரின் உடமைகள் அருகில் உள்ள சனசமூக நிலையத்தில் இருப்பதை அவதானித்த திருடர்கள் அவற்றை திருடுவதற்காக பூசகரின் கழுத்தை திருகிய சமயம் அலறல் சத்தம் கேட்டு அருகில் பாதுகாப்பு பணியில் இருந்த படையினர் ஓடிச் சென்று பூசகரை காப்பாற்றி திருகிய திருடரையும் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பூசகர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவ்வாறு இப் பிரதேசத்தில் இடம் பெறும் திருட்டுச் சம்பவங்களால் மக்கள் அச்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (150)

## பேருந்துக் கட்டணங்களில் பாகுபாடு பயணிகள் விசனம் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - வவுனியா - யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் பேருந்துக் கட்டணங்களில் பாகுபாடு இடம் பெறுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து வவுனியா செல்வதற்கு (70 கிலோ மீற்றர் தூரத்திற்கு) தனியார் பேருந்துகள் 180 ரூபாவும், அரச பேருந்துகள் 140 ரூபாவாவும் அறவிடுகின்றன. ஆனால் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு (120 கிலோ மீற்றருக்கு) தனியார் பேருந்துகள் 180 ரூபாவும், அரச பேருந்துகள் 160 ரூபாவாவும் அறவிடுகின்றன.

குறுகிய தூரத்திற்கும், கூடிய தூரத்திற்கும் ஒரே அளவான பணம் அறவிடப்படுவது பாரபட்சம் காட்டப்படுவதுடன் ஒழுங்கற்ற முறையாக காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 98 வீதம் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படுவதால மீள்குடியேறிய மக்கள் போக்குவரத்து தேவைகளை ஓரளவு பெற்று வருகின்றனர் இந்த நிலையில் பேருந்து சேவைக்கான கட்டணங்களில் வேறுபாடுகள் காணப்படுவதால் தாம் சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கும் மக்கள் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கின்றனர்.

மேலும் சில்லறை நாணயங்களும் பேருந்து நடத்துனர்களால் திருப்பித் தரப்படுவதில்லை எனவும் சில்லறை நாணயங்களை தாம் இழப்பதாகவும் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே பேருந்துக் கட்டணங்களில் பாகுபாடுகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் மாணவர்களின் கலைநிகழ்வின் ஒரு காட்சியையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வைத்திய கலாநிதி குருசாமி சுஜகரனின் பாரியார் திருமதி சுஜகரன் மாணவிக்கு பரிசில் வழங்கி வைப்பதையும் காணலாம். (50)

## மாணவர் மன்ற ஒன்றுகூடல்

(யாழ்நிருபர்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் மதிய பேசன விருந்தும் கடந்த சனிக்கிழமை உயர்தரம் மாணவர் மன்றத்தலைவர் செல்வன் சீ.தார்மீகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ற்ரன் கல்லூரியின் பழைய மாணவியும் யாழ்ப்பாணபோதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவில் கடமையாற்றுபவருமான வைத்தியகலாநிதி நளாயினி கணேசானந்தன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக தீவக கல்விவலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதனும், கௌரவவிருந்தினராக யாழ்ற்ரன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளர் சோ.விக்கினேஸ்வரனும் கலந்து கொண்டனர். (10)

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## விளையாட்டின்றி வளரும் குழந்தைகள்!

கூடி விளையாடு பாப்பா என்கிறான் பாரதி. இன்று பெரும்பாலான குழந்தைகள் பெரியவர்களின் கட்டுப்பாடுகளுடன் வீட்டுக்குள்ளேயே தனிமையில் தனக்குத் தானே பேசிக்கொண்டு தனக்குத் தானே விளையாடிக் கொண்டு பத்திரமாய் இருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் விழுந்து விழுந்து படிப்பதைத் தவிர வேறு எந்த சமூகச் செயற்பாடுகளுமின்றி உள்ளும் புறமும் தனிமையில் வளரும் குழந்தைகளின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

கூடி வாழ்தல் என்பது இயற்கையின் உள்ளுணர்வினால் விளைந்தது. அது தங்களை இந்த பூமியில் வாழத் தகுதியானவர்களாக்குகிற இயற்கை வாழ்முறை. கூடி வாழ்தலில் தான் ஒரு சமூகம் உயிர்த்திருக்கிறது. அது மனதுக்கும், உடலுக்கும் உரமூட்டுவதாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாக சமூகத்தின் அங்கத்தினரான ஒவ்வொருவரையும் பண்படுத்துகிறது.

அதற்கு குழந்தைப்பருவத்திலேயே சமூகம் கண்ட வழிமுறைதான் விளையாட்டு. கூடி விளையாடும் விளையாட்டுகளில் குழந்தையின் மனம் களிப்புறுகிறது. விளையாடுவதிலுள்ள மகிழ்ச்சிக்காக விளையாடும்போதே, ஆரோக்கியத்திற்குத் தேவையான உடற்பயிற்சியாகவும் அது அமைந்துவிடுகிறது.

புறஉலகின் எல்லா நெருக்கடிகளிலிருந்தும், பெற்றோர்களின், ஆசிரியர்களின், வீட்டுப்பாடச் சுமையின் மதிப்பெண் பூதங்களிலிருந்து விடுபட்டு தங்களுடைய இயல்பான படைப்பூக்க உணர்வை மீட்டெடுக்கவே குழந்தைகள் விளையாடுவதற்கு பேராவல் கொள்கின்றனர். சமூகத்தில் இயைந்து வாழ விளையாட்டு அவர்களை பண்படுத்துகிறது. தன் வயதொத்த குழந்தைகளோடு கூடி விளையாடும்போது கூட்டுச்செயலுக்கான விவேகமும், கூட்டுணர்வும் ஏற்படுகிறது.

தலைமைப் பண்பும், இந்தத் தலைமைப்பண்பின் தனித்தகுதியாக எதிர்பாராத சூழ்நிலைகளை எதிர்கொள்கிற திறனும் வளர்கிறது. பரஸ்பரம் விட்டுக்கொடுப்பதால், அன்பும், நட்பும் பெருகித் தழைக்கிறது. விளையாட்டுச் சண்டை என்பது விளையாட்டுச் சண்டையாகவே முடிந்து விடுகிறது. குழந்தைகளால் நீண்ட நேரத்திற்குக் கோபத்தையும், வெறுப்பையும், கசப்பையும் வளர்க்க முடியாது. யார் பக்கம் நியாயம் என்று தர்க்கரீதியாக யோசிக்காமல் யார் அதிகமாகப் புண்பட்டிருக்கிறார்களோ, யார் அதிகம் வருத்தமடைந்திருக்கிறார்களோ அவர்களுக்காக விட்டுக்கொடுப்பார்கள். இந்த விட்டுக்கொடுத்து இயைந்து வாழ்கிற பண்பு விளையாட்டின் மூலமே கிடைக்கிறது.

இன்று அவர்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கிற வீடியோ, கம்ப்யூட்டர் விளையாட்டுகள், தன்னையொத்த இன்னொரு குழந்தையோடு விளையாடுவதைத் தடுக்கின்றன. கார்ரேஸ், வேட்டையாடுதல், பைக் ஓட்டுதல் போன்ற குழந்தையின் வயதுக்கும், மனநிலைக்கும், யதார்த்தத்திற்கும் சற்றும் சம்பந்தமில்லாத விளையாட்டுகள்.

அதில் கூட்டுச் செயற்பாடும் இல்லை. விட்டுக்கொடுத்தல் இல்லை. தலைமைப்பண்பு தேவையில்லை. அன்போ, நட்போ, பாசமோ, தேவையில்லை. அதிலே ஒரே குறிதான். வெற்றிபெறவேண்டும் நிறைய புள்ளிகள் எடுக்கவேண்டும். தனிமையில் விளையாடும் இந்த விளையாட்டு குழந்தையிடம் பிடிவாதத்தை வளர்க்கிறது. தான் என்கிற வெறியை கிளப்புகிறது. வெற்றி பெறுவதற்காக எதையும் செய்யலாம் என்ற எண்ணத்தை வளர்க்கிறது.

கார்ரேஸில் எதிர்ப்படும் தடைகளை முறியடிப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிகிறான். தடுப்பைத் தகர்க்கிறான். விளக்குக் கம்பங்களை வீழ்த்துகிறான். குறுக்கே எதிர்ப்படும் எவரையும் காரை ஏற்றிக் கொல்கிறான். அப்போது குழந்தையின் முகத்தில் காணும் தீவிரத்தையும், வெற்றிபெற வேண்டும் என்கிற வெறியையும் பார்க்கும்போது உள்ளம் பதைபதைக்கிறது.

என்ன மாதிரியான எதிர்கால சமூகத்தை உருவாக்கப் போகிறோம்? எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய காலம் இது. குழந்தைகள் கூடி விளையாடுவதற்கான தருணங்களே இல்லாமல் ஆகிவிட்டது. வெறிச்சோடிக் கிடக்கின்றன தெருக்கள். குழந்தைகளின் குரலுக்காக ஏங்கித் தவிக்கின்றன சூரியனும் நிலாவும். ஆனால் குழந்தைகள் வீடுகளுக்குள் எப்போதும் அலறும் முட்டாள் பெட்டிகளின் முன்னேயோ, பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களிலோ வதைபட்டுக் கொண்டிருக்கின்றனர். சமூகத்தின் கூட்டுச்செயற்பாட்டின் ஆதாரமான, தார்மீக நெறிகளைப் பயிலாமலே ஒரு எதிர்கால சமூகம் வளர்ந்தால் என்ன ஆகும்? யோசிக்க வேண்டும்.

- ஆசிரியர்

# ஒரு தலைக் காதலால் கடத்தப்பட்ட யுவதி மீட்பு

(மன்னார்)

மன்னார் மடு கல்விப் பணிமனையில் கடமையாற்றுகின்ற யுவதி ஒருவர் நேற்று முன்தினம் காலை தனது வீடு அமைந்துள்ள இத்திக்குளம் ஆண்டாங்குளம் பகுதியில் இருந்து அலுவலகம் நோக்கி மேட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கடத்திச் செல்லப்பட்டுள்ளார.

நேற்றுக் காலை 9 மணியளவில் டொல்பின் ரக வான் ஒன்றில் வந்து இடை மறித்த இரண்டு இளைஞர்கள் குறித்த யுவதியைக் கடத்திச் சென்ற நிலையில், நண்பகல் 11 மணியளவில் செட்டிகுளம் ஜயசிங் கபுரம் பகுதியில் வைத்து குறித்த யுவதி மீட்கப்பட்டுள்ளதாக விடத்தல்தீவு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில மேலும் தெரிய வருவதாவது, மாந்தை மேற்கு பிரதேசச் செயலர் பிரிவுக்குப்பட்ட இத்திக்குளம் ஆண்டாங்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதி, மடு கல்வித் திணைக்களத்தில் கடமைக்காக வழமை போல காலை தனது வீட்டில் இருந்து அலுவலகம் நோக்கி மேட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இந்நிலையில், சிறிது தூரத்தில் வைத்து வான் ஒன்றில் வந்த இருவர் குறித்த யுவதியை இடைமறித்து கடத்திச் சென்றுள்ளனர். இச்சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பொலிஸ் அவசர தொலைபேசிக்கு தொடர்பை ஏற்படுத்தித் தெரியப்படுத்தி உள்ளனர்.

இதனையடுத்து, சகல இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, காலை 11 மணியளவில் செட்டிகுளம் ஜெயசிங் கபுரம் பகுதியில் குறித்த வான் சென்று கொண்டிருந்த போது பொலிஸார் இடைமறித்து சோதனைகளை மேற்கொண்ட போது குறித்த யுவதி மீட்கப்பட்டதோடு, குறித்த வானில் இருந்த 23 மற்றும் 28 வயதுடைய இளைஞர்கள் இருவரையும் கைது செய்த நிலையில் அவர்களை விடத்தல்தீவு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விடத்தல்தீவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது குறித்த யுவதியைக் காதலிப்பதன் காரணத்தினால் அழைத்துச் செல்வதாக குறித்த 28 வயதுடைய இளைஞர் தெரிவித்த நிலையில் அதனை யுவதி மறுத்துள்ளதோடு தனக்கு வேறு ஓர் இடத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், குறித்த யுவதி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபர்கள் இருவரையும விடத்தல் தீவு பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## ஆறு மாதத்தில் 34 சிறுவர்கள் வவுனியாவில் துஷ்பிரயோகம்

கடந்த ஆறு மாத காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் 34 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலகத்திற்கு கடந்த 6 மாத காலப்பகுதியில் 34 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் பாலியல் துஷ்பிரயோகம் 13, உடலியல் ரீதியான துஷ்பிரயோகம் 12, தற்கொலை முயற்சி (உள ரீதியான துஷ்பிரயோகம்) 08, சிறுவர்கள் மீதான புறக்கணிப்பு 01 என 34 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளது.

அத்துடன் பெரும்பாலான துஷ்பிரயோகங்கள் சிறுவர்களுடைய நெருங்கிய உறவினர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவும் பொதுமக்களிற்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டு துஷ்பிரயோக சம்பவங்களை முறைப்பாடு செய்யும் வீதம் அதிகரித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி 1929 சிறுவர் உதவி சேவைக்கு அறிவிக்கும் அதேநேரம் 024-2224444 மற்றும் 024-5676760 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

## வரலக்ஷ்மி பூசை

பொன்னாலை திருவருள் மிகு ஸ்ரீதேவி, பூதேவி உடனுறையும் ஸ்ரீமத் வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வருடாந்த வரலக்ஷ்மி விரத பூசைகள் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 8.00 மணிக்கு மஹாலக்ஷ்மிக்கு விசேட அபிஷேகம் விசேட பூசை உற்சவங்களுடன் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து வரலக்ஷ்மி காப்பு வழங்கல் நடைபெறும். அன்றைய தினம் அடியார்கள் வந்து வரலக்ஷ்மி அருளை பெறுமாறு ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (50)

# தெல்லிப்பளை இலக்கியகளத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் இன்று

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை, கலை இலக்கியக்களத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் இன்று முற்பகல் 9.00 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண் முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச்செயலாளர் ப.விக்கேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன் ஓய்வு நிலை அதிபர் சி.அனந்தசயனன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராசேந்திரன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கி.விசாகரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரை வழங்குவார். கலைப்பேரரசு அமரர் ஏ.ரி.பொன்னுத்துரை அரங்கில் நடைபெறும் நிகழ்வில் வெள்ளி விழா மலரும் சைவப்புலவர் சு.செல்லத்துரையின் ‘சிவகாமி’ கவிதை நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

நூலின் அறிமுகவுரையை யாழ்.மகாஜனாக் கல்லூரி ஆசிரியை பா.கணேசதுரை ஆற்றுவார். அதனை அடுத்து முது பெரும்கலைஞர் கலாபூஷணம் வை.கா.சிற்றம்பலம் மற்றும் புலவர் ம.பார்வதிநாதசிவம் ஆகியோர் கௌரவிக்கப்படுவர்.

வெள்ளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டி, வலி. வடக்கு பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஐம்பது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைககப்படவுள்ளது. (68)

# உயர்தர மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

(குருநகர்)

சமாதான மற்றும் நல்லிணக்கப் பணியகத்தால் இவ்வருடம் கல்வித்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவச கருத்தமர்வுகள் நடத்தப்பட உள்ளன. நாளையும் நாளை மறுதினமும் மேற்படி கருத்தமர்வுகள் தகுதி வாய்ந்த வளவாளர்களால் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பணியக ஒருக்கிணைப்பாளர் நிரஞ்சனி கூறினார்.

கருத்தமர்வில் பங்கெடுக்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவசக் கையேடுகளும் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.பிரதான வீதி அகவொளி மண்டபத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை ஆசிரியர் எஸ்.கோகுலனாலும், 23 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.பொருளியல் கல்லூரி மண்டபத்தில் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை ஆசிரியர் பி.கணேசினாலும், 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். பொருளியல் கல்லூரி மண்டபத்தில் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை ஆசிரியர் பி.எஸ்.குமரனாலும் அரசியல், விஞ்ஞானம், புவியியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய கருத் தமர்வுகள் நடத்தப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (68)

# முழுமையான மீள் குடியேற்றத்துக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## - நாடாளுமன்றத்தில் ஈ.பி.டி.பி உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்

வடபகுதி மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் இரண்டு பிரதான விடயங்களை நாம் அவதானித்துள்ளோம். ஒன்று கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் முடிவடையாமை. மற்றையது அபாய நிலைப் பிரதேசங்களாக அவை இன்னமும் இருக்கின்றமை. ஆனாலும் கண்ணிவெடிகளை அகற்றி, மீள்குடியேற்றத்துக்குச் சாதகமான நிலை ஏற்பட்ட பிரதேசங்களில் தொடர்ச்சியாக மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இதேவேளை, படையினர் பொதுமக்கள் பலரின் வீடுகளையும் காணிகளையும் ஒப்படைத்து வரும் நடவடிக்கைகளும் சமாந்தரமாக நடைபெற்று வருகின்றன.

மீள்குடியேற்ற நடவடிக்கையின் அடுத்த கட்டமாக கடந்த வாரம் ஒரு தொகுதி மக்கள் முல்லைத்தீவு மாட்டத்திலுள்ள முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதேபோல, கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இத்தாவில் பகுதியில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் மக்களுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றி வருகின்றோம். ஆகவே, இது தொடர்பான பல புரிதல்கள் எங்களுக்குண்டு.

மீள்குடியேற்றத்தில் பல பிரச்சினைகளும் பல அனுபவங்களும் உள்ளன. முக்கியமாக வன்னிப் பகுதியின் மீள்குடியேற்றத்துக்கும் யாழ். மாவட்டத்தின் மீள்குடியேற்றத்துக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. வன்னியில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பெரும்பாலும் வெற்றியளித்து வருகின்றன.

யாழ். மாவட்டத்தின் நிலை அவ்வாறல்ல. வன்னியில் அதிகமான மக்கள் அங்கே போரின் இறுதிவரை வாழ்ந்தவர்கள். அவர்கள் முகாம்களில் இருந்து நேரடியாக மீண்டும் தங்களுடைய கிராமங்களுக்கு வந்தார்கள். ஆகவே, அவர்களின் மீள்குடியேற்றம் வெற்றிகரமான முறையில் சாத்தியமாக அமைகிறது. எல்லாவற்றையும் இழந்த மக்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களையும் வசதிகளையும் உதவிகளையும் பயன்படுத்தி, தங்களுடைய வாழ்க்கையையும் பிரதேசங்களையும் மீளக்கட்டியெழுப்பி வருகின்றார்கள். அங்கே இன்னும் வருகை தராமல் இருப்பவர்கள், வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசிப்பவர்களும் வெளியிடங்களில் இருப்போருமே.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக, வலி வடக்கு மற்றும் தென்மராட்சி கிழக்கு போன்ற பிரதேசங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மந்த கதியில் நடைபெறுவதற்குக் காரணம், அங்கே இருந்த மக்களில் 40 சதவீதமானவர்கள் நாட்டை விட்டே வெளியேறியமையாகும். ஏனையோரில் ஒரு தொகுதியினர் நாட்டிலிருந்தாலும் அவர்கள் பிற இடங்களில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். குறிப்பாக, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த ஏராளமான தமிழர்கள் நீண்ட காலமாகவே கொழும்பு போன்ற பகுதிகளில் குடியேறியிருக்கின்றனர்.

அவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் இடங்களிலிருந்து தங்களுடைய சொந்தக் கிராமங்களுக்கு வந்து செல்கின்றனர். ஆனால், அவர்கள் அங்கு மீளக்குடியேற முன்வருகிறார்களில்லை. இவர்கள் தவிர்ந்த ஏனையோரே யாழ் மாவட்டத்தில் மீள்குடியேறுகின்றனர். பல காணிகள் இன்னும் வெறுமையாகத்தான் காணப்படுகின்றன. இதற்கு யார் என்ன செய்வது? இதுதான் உண்மையான நிலைவரமாகும்.

தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் மீள் குடியேற வேண்டுமென்று தங்களைப் பதிவு செய்தவர்களில் எத்தனை சதவீதத்தினர் அங்கு சென்று மீள் குடியேறியிருக்கிறார்களென்பது கருத்திலெடுக்கப்பட வேண்டும். அங்கு ஒவ்வொரு வீதியிலும் குறைந்தது 80 வீடுகள் இருந்தால் அதில் 20 வீடுகளில்தான் மக்கள் மீள்குடியேறியிருக்கிறார்கள். ஏனையோர் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் இருந்தாலும் அவர்கள் அங்கு மீள்குடியேறுகிறார்களில்லை. இதுதான் அங்குள்ள நிலைமை! ஆகவே, 90,000 பேர், 1,10,000 பேர் என்று எண்ணிக்கை ரீதியாக கணக்கு காட்டலாம். முன்பு அங்கு இருந்தவர்களின் எண்ணிக்கை அப்படி இருக்கலாம். எத்தனை சதவீதத்தினர் அங்கு மீள்குடியேறாது இந்த நாட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள் என்ற விடயமும் கருத்திலெடுக்கப்பட வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் 8,295 குடும்பங்களைச் சேர்ந்த 30,116 பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளனர். இதில் 6,496 குடும்பங்களைச் சேர்ந்த 23,514 பேர் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்தவர்கள். தென்மராட்சி-எழுதுமட்டுவாளில் 29 குடும்பங்கள் மீளக்குடியேற வேண்டியுள்ளன. ஆனால், இவர்கள் மீள்குடியேறுவதற்கு முன்னர் அங்கு கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும். மொத்தமாக அங்கே 125 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளனர்.

வலிகாமம் மேற்கு - மாதகலில் ஏற்கனவே 18 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. இப்படியாக கட்டங்கட்டமாக இந்த நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இம்மாதம் 20ஆம் திகதி வலி. வடக்கில் 4,859 குடும்பங்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் கௌரவ அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படுகிறது. அந்த மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் ஆறு மாதங்களுக்கான உலர் உணவு, தற்காலிக வீடுகள், குடிசைகள், மின்சாரம், வீதி அபிவிருத்தி போன்ற திட்டங்களும் அடங்குகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பரவிப்பாஞ்சான் கிராம அலுவலர் பிரிவிலும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள முகமாலை, வேம்பொடுகேணி போன்ற இடங்களிலும் மீள்குடியேற்றத்துக்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். முகமாலைப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணி நிறைவடைய இன்னும் சில காலம் செல்லலாம். ஏனெனில், இறுதிக்கட்ட யுத்தத்தின்பொழுது அப்பிரதேசத்தில் ஏராளமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. 'ஹலோ டிரஸ்ற்' நிறுவனத்தின் தரவுகளின்படி, அவர்கள் தினமும் நூற்றுக்கணக்கான கண்ணிவெடிகளை அகற்றிக் கொண்டிருக்கின்றார்கள். கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட, திருப்திகரமான சூழலில் மக்களை மீளக் குடியமர்த்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பரவிப்பாஞ்சானில் அதன் முற்பகுதியான 26 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதி கடந்த மாதம் பாதுகாப்புப் படையினரின் பொறுப்பிலிருந்து மீட்கப்பட்டு இப்பொழுது உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில், பத்து கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் முழுமைப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது.இப்பொழுது அப்பணிகள் மிகவும் துரிதமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மிகத்துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதை நீங்கள் நேரில் சென்று அவதானிக்கலாம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3875 குடும்பங்களைச் சேர்ந்த 15,289 பேரும், வவுனியா மாவட்டத்தில், 2592 குடும்பங்களைச் சேர்ந்த 10,319 பேரும் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 3922 குடும்பங்களைச் சேர்ந்த 14,709 பேர் மீளக் குடியமர்த்தப்படவேண்டியுள்ளனர். இவர்களில் 157 குடும்பங்களைச் சேர்ந்த 555 பேர் முசலிப் பிரதேசத்தில் இருக்கின்றனர். ஏனையவர்களில் 211 குடும்பங்களைச் சேர்ந்த 955 பேர் தமிழகத்திலிருந்து திரும்ப வேண்டியுள்ளனர். ஆகவே, தரவுகளின்அடிப்படையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை நோக்க முடியாது. மீள்குடியேற்றப்பட வேண்டியவர்களின் தொகையை அதிகரித்துக் காட்டப்படும் தரவுகள் ஏற்புடையவையல்ல. என்னைப் பொறுத்தவரையில், தேக்க நிலையில் இருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதமாக நிறைவேறுமாயின் வன்னிப்பகுதி மீள்குடியேற்றம் முழுமை பெற்றதாகக் கருதமுடியும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் வலி. வடக்குப் பிரதேசம், மாதகல் மேற்குப் பிரதேசம், சங்கானை division இல் ஒரு சில பகுதிகள், வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் கிழக்குப் பகுதி, சுண்டிக்குளம் போன்ற பகுதிகளிலும் கோப்பாயில் வளலாய் பிரதேசத்திலும் மற்றும் தீவகப்பகுதிகளில் சில தனியார் வீடுகளில் பாதுகாப்புப் படையினர் தங்கியிருப்பதன் காரணமாக மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமடைகின்றன. கௌரவ உறுப்பினர் விநாயகமூர்த்தி அவர்கள், வலி. வடக்கில் மீள்குடியேற்றம் நடைபெறாமல் 24 கிராம சேவையாளர் பிரிவுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். அவ்வாறு இல்லை. தற்பொழுது 16 கிராமசேவையாளர் பிரிவுகளில்தான் முழுமையான மீள்குடியேற்றம் நடைபெறாமல் இருக்கின்றது. ஏனைய 08 கிராம சேவையாளர் பிரிவுகளின் சில பகுதிகளில் மட்டும்தான் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம் பெறவில்லை. ஆகவே, நீங்கள் தரவுகளைக் காட்டும் போது 24 கிராமசேவையாளர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் நடைபெறவில்லை என்று சொல்வது ஏற்புடையதல்ல. நாங்கள் அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை என்னவென்றால், யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து மீட்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றத்தின்போது கிட்டத்தட்ட 30 வீதமான மக்கள்தாம் குடியேறினார்கள்.



**தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் மீள் குடியேற வேண்டுமென்று தங்களைப் பதிவு செய்தவர்களில் எத்தனை சதவீதத்தினர் அங்கு சென்று மீள் குடியேறியிருக்கிறார்களென்பது கருத்திலெடுக்கப்பட வேண்டும். அங்கு ஒவ்வொரு வீதியிலும் குறைந்தது 80 வீடுகள் இருந்தால் அதில் 20 வீடுகளில்தான் மக்கள் மீள்குடியேறியிருக்கிறார்கள். இதுதான் அங்குள்ள நிலைமை! எத்தனை சதவீதத்தினர் அங்கு மீள்குடியேறாது இந்த நாட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள் என்ற விடயமும் கருத்திலெடுக்கப்பட வேண்டும்.**

இவ்வளவு குறைந்தளவு மக்கள் மீள்குடியேறும் போது, அவர்களுக்கான பொதுவசதிகளைச் செய்து கொடுப்பதில் பல நடைமுறை ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக இரண்டு குடியிருப்பாளர்களுக்காக ஒரு வீதியை புனரமைப்பது என்பது அல்லது ஒரு வீதிக்கு மின்சாரத்தை வழங்குவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை. எதிர்காலத்தில், வலி. வடக்குப் பிரதேசத்தில் இதுவரை மீள்குடியேறாத கிராம சேவையாளர் பிரிவுகளில் விரைவில் மீள்குடியேற்றம் நடைபெறும் என்ற அரசாங்கத்தின் வாக்குறுதியில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 900 தனியார் வீடுகளில் பாதுகாப்புப் படையினர் தமது முகாம்களை அமைத்திருக்கின்றார்கள். இவையும் மக்களிடம் மீளளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.இச்செயற்பாட்டையும் விரைவுபடுத்த வேண்டும் என்பது அரசின் நோக்கமாக இருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில், முழுமையான மீள்குடியேற்றத்துக்கு மக்களின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கவேண்டும் என்பது முக்கியமானது. 30 சதவீதமான வலி. வடக்கு பிரதேச மக்கள் அங்கிருந்து யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு நிரந்தரமாக குடிவந்து விட்டார்கள் இதில் ஒன்றும் தப்பில்லை. நீண்டகாலமாக - கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு முன்பே அவர்கள் அங்கு வந்துவிட்டார்கள்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# சகல மாகாண சபைகளையும் அரசாங்கம் கைப்பற்றும்



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சகல மாகாண சபைத் தேர்தல்களிலும் அமோக வெற்றி பெறும் என்றும் நியாயமான தேர்தலை நடத்த அரசு உறுதிபூண்டுள்ளது என்றும் சிறிலங்க சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பு மகவெலி மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிழக்கில் அரசாங்கம் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

வீதி அபிவிருத்தி- மின்சார விநியோகம்- சுகாதார வசதிகள் மேம்பாடு- கல்வித்துறையில் முன்னேற்றம் போன்ற வசதிகளை கிழக்கு மக்கள் இன்று அனுபவிக்கின்றனர். இன்று திருகோணமலையில் இருந்து மட்டக்களப்புக்கு ஒன்றரை மணி நேரத்தில் செல்லக் கூடிய வசதிகள் உள்ளன. கிழக்கு- வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்மாகாணங்களில் நாம் கடந்த காலங்களில் பெற்ற வெற்றிகளை விடஅதிகளவில் வெற்றி பெறுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஆறு வருடத்திற்கொரு முறை ஐ.தே.க தலைவர் தெரிவு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கான தலைவர் தெரிவு எதிர்வரும் காலங்களில் ஆறுவருடங்களுக்கு ஒரு முறையே இடம்பெறுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் நேற்று இடம்பெற்ற மத்திய செயற்குழுவின் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி கட்சியின் தலைவர் தெரிவு 6 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கட்சியின் செயலாளர், தவிசாளர், பொருளாளர் ஆகியோரை தலைவரே தெரிவு செய்வார்.

பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் ஆகியோரையும் தலைவரே தெரிவு செய்வார்.

பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் தெரிவில் போட்டி ஏற்படுமாயின் அதன்பின் மத்திய செயற்குழுவின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாற்றம் செய்ய முடியும்.

# நலன்புரி முகாமிலிருக்கும் பெண் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டி

(கொழும்பு)

சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து கட்டைபறிச்சான் நலன்புரி முகாமில் தங்கியிருக்கும் பெண் ஒருவரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

பத்மநாதன் பத்மலதா எனும் இப்பெண் அகில இலங்கை தமிழர் கூட்டணியின் திருகோணமலை மாவட்டத்திற்கான வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளார் என அக்கட்சியின் தலைவரும் அக்கட்சியின் திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான டாக்டர் காசிலிங்கம் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் அவல நிலையை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தும் நோக்கத்துடனேயே தான் அகதி பெண் ஒருவருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம்கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள 13 வேட்பாளர்களில் பத்மலதா உட்பட ஐந்து பெண்கள் இடம் பெற்றுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

# சட்டவிரோத ஆட்கடத்தலுடன் எனக்கு தொடர்புகள் இல்லை



(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்பு கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவிற்கு சட்ட விரோதமான முறையில் ஆட்களை கடத்தும் நடவடிக்கைகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சில தமிழ் இணைய ஊடகங்கள் தமது பெயரை, சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் கற்பிக்கும நோக்கத்தில் இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. வடக்கு கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களில்மட்டுமே நான் பங்கேற்று வருகிறேன்.

இளைஞர் யுவதிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தீய நோக்கங்களைக் கொண்ட சில தரப்பினர்திட்டமிட்ட வகையில் மீண்டுமொரு தடவை எனக்கு எதிராக சேறு பூசும் முயற்சியாக இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

வடக்கு கிழக்கு மக்களுக்குத் தேவையான சகலவசதிகளையும் அரசாங்கம் வழங்கி வருகின்றது. உயிரைப் பணயம் வைத்து அவுஸ்ரேலியாநோக்கி பயணம் செய்ய வேண்டிய அவசியம் எவருக்கும் கிடையாது.

யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மக்களுக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் ஜீவனோபாயமேம்பாட்டுத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸாருக்கு எதிராக அதிகளவு முறைப்பாடுகள்




(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் துன்புறுத்தல்கள், மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் என்பன குறித்து 168 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் இது போன்ற 347 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாக ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

சமூகத்தில் துன்புறுத்தல்களுக்கு இலக்காகின்ற சம்பவங்களில் மிகக் குறைந்த வீதமான முறைப்பாடுகளே பதிவானதாக அவர் கூறினார்.

முறைப்பாடுகளில் பெரும்பாலானவை பொலிஸாருக்கு எதிராகவே முன்வைக்கப்பட்டுள்ளன.

ஏதேனும் குற்றச்செயல் அல்லது முறைப்பாடு தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்கையில், அதற்கான சாட்சியங்களைக் கண்டறியும் வழிமுறைகள் காரணமாக பொலிஸார் மீது கூடுதலான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து பொலிஸ ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவிக்கையில் விசாரணைகளின் போது எந்த வகையிலும் துன்புறுத்தல்களில் ஈடுபடக்கூடாது என பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒருவரை கைது செய்ய முற்படும் போது சம்பந்தப்பட்ட நபர் எதிர்ப்பு நடவடிக்கைகளை கையாள முற்படுவாராயின், அதற்கெதிராக பொலிஸார் ஓரளவு அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும்.

அத்துடன் சட்டவிரோதமான கூட்டங்கள், ஊர்வலங்களை நடத்தி வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தல் மற்றும் மக்கள் உடைமைகளுக்கு அல்லது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களில் அவற்றை தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

இந்த விடயங்களின் அடிப்படையில் முறைப்பாடுகள் கிடைத்திருக்குமாயின்,அவற்றைத்துன்புறுத்தலாக எவரும் கருதி விட முடியாது என அவர் தெரிவித்தார்.

# அதிவிசேட இலங்கையரை அழைக்கின்றது பிரிட்டன்

(கொழும்பு)

விஞ்ஞானம், மானுடவியல், பொறியியல் மற்றும் கலைத் துறையில் அதிவிசேட திறமைகொண்ட இலங்கையர்களை ஐக்கிய இராச்சியத்தில் பணியாற்ற அழைப்பதாக ஐக்கிய இராச்சிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலும் மாலைதீவிலும், விஞ்ஞானம், மானுடவியல், பொறியியல் மற்றும் கலைத்துறைகளில் திறமையான சில மேதாவிகள் உள்ளனர். இவர்கள் "மேதாவிலாச திறமையாளர் குடிவரவு பாதை" என்னும் விசேட ஏற்பாடு வழியாக ஐக்கிய இராச்சியத்தில் வேலை செய்யும் சாத்தியத்தை ஆராய்ந்து பார்க்கும்படி நான் விதந்துரைக்கின்றேன் என இலங்கைக்கான ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகர் கூறியதாக கொழும்பிலுள்ள பிரத்தானிய உயர்ஸ்தானிகராலயம் கூறியுள்ளது.

இந்த விசேட ஏற்பாட்டிற்கு அமைய ஆகஸ்ட் 2011 இல் இருந்து ஏப்ரல் 2013 வரையான காலப்பகுதிக்கு 1000 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த சட்டத்தின்கீழ் விஸாவுக்கு விண்ணப்பிப்போருக்கு வேலை வழங்குநரின் அனுசரணை தேவை இல்லை.

இவ்வாறு பிரித்தானியாவுக்கு வருவோருக்கு முதலில் 3 வருடம் 4 மாதங்களுக்கு விஸா வழங்கப்படும். தேவைக்கேற்ப விஸாக் காலம் நீடிக்கப்படும். 5 வருடங்கள் பிரித்தானியாவில் இவர்கள் தங்கி விட்டால் நிரந்தர வதிவுரிமை கோர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது

# அரசாங்க வர்த்தமானிகள் சட்டபூர்வமற்றவையாகும் நிலை

நாட்டில் தற்போது அரசாங்க அச்சகர் இல்லாததால், தற்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள், அரசாங்க வர்த்தமானிகள், மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள்கூட சட்டபூர்வமானவையாக மாட்டா என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தைச் சேர்ந்த பணிப்பாளர் ஒருவரே தற்போது அரசாங்க அச்சகரின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கூறினார். மேற்படி அதிகாரிக்கு அரசாங்க அச்சகரின் அதிகாரங்களை பிரயோகிக்க அதிகாரம் இல்லை எனவும் இவ்வாறான சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தல்களும் நெருக்கடிக்குள்ளாகலாம் என அவர் கூறினார். இது குறித்து ஆராய்வதாக அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். இவ்விடயத்தை சுட்டிக்காட்டியமைக்காக எதிர்க்கட்சித் தலைவருக்கு அவர் நன்றி தெரிவித்தார்

# சிறுமிகளை விற்பனை செய்த பாதாள உலக குழுத்தலைவர் கைது

கொழும்பை அண்டிய கிராமப் பகுதி சிறுமிகளை 1,000 ரூபாவிற்கு விற்பனை செய்து வந்த பாதள உலகக்குழுத் தலைவர் ஒருவர் மாளிகாவத்தை பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பாதாள உலககுழுத் தலைவர் தற்போது பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்புக்கு வெளியில் இருந்து அழைத்து வரப்பட்ட மூன்று யுவதிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் 16 தொடக்கம் 21 வயதுடையவர்களாவர். ஏமாற்றி இவர்கள் அழைத்து வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. ஒரு தடவைக்கு 5,000 மற்றும் 10,000 ரூபாவுக்கு இச்சிறுமிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளனர்.

# மாணவர்களை நல்வழிப்படுத்த ஆன்மிகமே சிறந்த வழியாகும்

## – நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

(யாழ்.நிருபர்)

சமய குரவர் காட்டிய வழியில் நின்று ஆன்மிகத்துறையில் ஈடுபடுவதன் மூலமே மாணவர்களிடையே சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கட்டி எழுப்ப முடியும். இதற்கு ஆசிரியர்கள் சிறந்த வழிகாட்டியாக விளங்க வேண்டும் என நல்லூர் கோட்டக கல்விப்பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நால்வர் சிலை புனர்ஸ்தாபித விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று நாட்டில் மாணவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ள, அதே வேளை மாணவர் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றது. இவற்றில் இருந்து மாணவர் சமுதாயத்தை மீட்டெடுப்பதற்குச் சிறந்த வழி அவர்களை ஆன்மிகத்துறையில் ஈடுபடுத்துவதாகும். எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் சமய குரவர் நால்வரும் சைவ சமயத்தை வளர்த்தெடுத்தார்கள். அவர்கள் அருளிச் செய்த பக்தி இலக்கியங்களான திருமுறைப்பாடல்களை ஓதுவதற்கு எமது பிள்ளைளைப் பயிற்றுவிக்க வேண்டும். சமய குரவர் காட்டிய வழியில் மாணவர்களை ஆன்மிக நெறியில் ஈடுபடுத்த வேண்டும்.

எந்த ஒரு பாடசாலையிலும் இல்லாத சிறப்பு இந்தப்பாடசாலையில் அமைந்துள்ளது. சமய குரவர் நால்வருக்கும் செப்பினாலான விக்கிரகங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை வழங்கியவர்கள் பெருமைக்குரியவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

இந்தப்பாடசாலையின் பழைய மாணவியும், சட்டத்தரணியுமான செல்வி ஞானலோஜினி அவர்கள் இந்த மண்டபத்தைப் புதுப் பொலிவுடன் அழகுற அமைத்துத் தந்துள்ளார். பாராட்டுக்குரிய அவரது செயற்பாடு ஏனைய பாடசாலைகளுக்கும் முன்மாதிரியாக அமைய வேண்டும். வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அவர் உதவிகள் செய்து வருகின்றார்.

மாணவர்கள் கல்வியில் சித்தி பெறுவது மட்டுமின்றி வாழ்க்கையில் நல்ல மனிதர்களாக மனிதனை மதிக்கும் நல்ல பண்புள்ளவர்களாக விளங்க வேணடும். தாய், தந்தை, சகோதரர்கள், ஆசிரியர் என்று எல்லோரிடமும் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும். எனவும் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய சைவசமயபாட சேவைக்கால ஆலோசகர் திருமதி பா.பாலசிங்கமும் உரையாற்றினார். (10)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் திவி நெகும திட்டத்தின் கீழ் சுமார் 100 பயணாளிகளுக்கு நல்லின முருங்கை மரக்கன்றுகள் வழங்கும் வைபவம் ஜே/101 கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்ற போது பயனாளி ஒருவருக்கு ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித்தலைவருமான ஆ.இரவீந்திரதாஸன் வழங்கி வைப்பதனையும் அருகில நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் ஸ்ரீகணேசராசா நிற்பதையும் காணலாம்.

## இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இன்று 21 ஆம் திகதியும், நாளை 22 ஆம் திகதியும், எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமையும் இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு அரசறிவியல் பாடமும், காலை 11.30 மணிக்கு சித்திரப் பாடமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இந்து நாகரிகமும் காலை 10 மணிக்கு அரசறிவியல் பாடமும் காலை 11.30 மணிக்கு சித்திரப் பாடமும் புதன கிழமை மாலை 3.00 மணிக்கு புவியியல் பாடமும் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியை கலைவாணி இராமநாதன் இந்து நாகரிகப்பாடத்திற்கும், எம்.அசோக குமார் அரசறிவியல் பாடத்திற்கும், பி.குமரன் புவியியல் பாடத்திற்கும், க.ஸ்ரீஸ்கந்த மூர்த்தி சித்திரப் பாடத்திற்கும் வளவாளர்களாக கலந்து கொளளவுள்ளனர்.

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்


(யாழ்ப்பாணம்)

யாழ்.உயரப்புலம் குணபாலன் வித்தியாலய நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட ஆசிரியர் ச.சிவ்சுதன தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவானந்தராசா, சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை நலன் விரும்பி எஸ்.கணேசவேல், பழைய மாணவி திருமதி ஜெயானந்தி சிறிக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ க.குகதாஸசக் குருக்கள் வழங்கவுள்ளதுடன் வாழ்த்துரையை இலங்கை சின்மயா மிஷனின் யாழ்.வதிவிட ஆச்சாரியார் சுவாமிஜி ஜாக்கிரத சைதன்யாவும நிறுவுனர் தின உரையை முன்னாள் ஆசிரியர் ஏ.லிங்கராஜ் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

## பரமர் சங்கமம்



"கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதற்கேற்ப இந்தப்பரந்த உலகில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கல்விமான்களில் கூட முழுமையாகக் கற்றுக்கொண்டவர் எவருமில்லை. துறைசார் கல்வியென வகை பிரித்து கல்வி போதிக்கப்படுகிறது. மிகமிக எண்ணிக்கை குறைந்தவர்கள் இரண்டு மூன்று துறைசார் கல்வியைக் கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

எனினும் ஒரு துறையிலேயே தொழிலையோ, உத்தியோகத்தையோ செய்ய முடிகிறது. இவ்வாறே மொழிகளைக் கற்றுக்கொள்வதும் துறைசார் கல்வியையோ, மொழியையோ ஒன்றுக்கு மேற்படக் கற்றுக்கொண்டிருப்பதை மேலதிகத் தகைமையாக கொள்ளப்படுகிறது.

அட்டாவதானி, தசாவதானி என்று நம்மூதாதையர் பேர் பெற்றிருப்பதை அறிந்துள்ளோம் பன்மொழிப்புலவர்கள் கூட வாழ்ந்திருக்கின்றனர்.

சுவாமி ஞானப்பிரகாசருக்கு ஐந்துக்கும் மேற்பட்ட மொழி ஞானம் இருந்ததாக அவர் பற்றிய தரவுகள் தெரிவிக்கின்றன. அதனால் தமிழ்ல் அகராதி ஒன்றைப் படைக்க முடிந்தது.

1 ்31ஆம் ஆண்டு யாழ். பொது நூலகம் தீக்கிரை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டு தன்னுயிரை நீத்துக் கொண்டதாகக் கூறப்படுகின்ற தாவீது அடிகள் 14 மொழிகளை எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டிருந்ததாகவும் அறிய முடிகிறது.

இவ்விதம் தத்துவங்கள் சாத்திரங்கள், விஞ்ஞானம் போன்றவற்றை உருவாக்கி அதனூடாக பல நவீன கண்டு பிடிப்புகளைக் கண்டு பிடிக்கவும் பல்துறைக் கல்விதான் உந்து சக்தியாக திகழ்கிறது.

மனிதன் தனது மூளையில் சேகரித்து வைக்க முடியாததை எல்லாம் ஆவணப்படுத்த கணினியைக் கண்டறிந்தான். அதற்கும் மேலாக அதனில் சேகரிக்கப்பட்டதை இல்லாமல் செய்ய வைரசையும் உருவாக்கி விட்டான்.

கல்விக்குக்கரை இல்லை எனறு சொல்லுமாப் போல் கற்கால மனிதன் இன்றைய மில்லேனிய மனிதனாக உருவாகும் வரலாற்றுப் பாதையில் கல்வியின் சிறப்பு வளர்ந்து கொண்டிருக்கு.

எண்டாலும் மனிதனால் கல்வியில் முழுமை பெற்றுவிட முடியாத நிலையே இன்றைக்கும் இருக்கின்றது. அட்டாவதானம தசாவதானம் பன்மொழித்திறமை இருந்தாலும் ஓரளவுக்கு மேலாக அவனால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது.

ஏன் மனிதன் தன்நிலையை இழக்கையில் எல்லாத்தையும் மறந்தவனாகவே ஹோமோவாக காணப்படுகிறான் ஆனைக்கும் அடி சறுக்கும் உண்மையல்லவா? பத்துக்கும் மேற்பட்டமொழி அறிவோ, துறைசார் அறிவு பல பெற்றாலும் உலகளவில் காணப்படுகின்ற அனைத்தையும் கற்றுவிடல் எழிதன்று உள்ளங்கை அளவே தேறுமென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியல்லவா? சொல்லுங்க பாப்பம்.

## இளைப்பாறும் மண்டபம் கல்லாறில் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்லாறுப் பகுதியிலுள்ள சுண்டிக்குளம் நல்ல தண்ணி தொடுவாய் பகுதியில் மீனவர்களுக்கென இளைப்பாறும் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலில் ஈடுபடும் இப்பகுதி மீனவர்கள் இரவு வேளைகளில் இளைப்பாறுவதற்கு ஏற்றவகையில் இளைப்பாறும் மண்டபம் இல்லாத நிலை காணப்பட்டது.எனினும் தற்போது டனிஸ அகதிகள் பேரவையினால் இம் மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (கே)

## முரசின் இன்றைய பலன்

(21.07.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 06 ஆம் திகதி. துதியை முற்பகல் 10.15 வரை. நட்சத்திரம் ஆயிலியம். மரணயோகம் பிற்பகல் 12.59 வரை. இராகுகாலம் 9.01 - 10.31 வரை. சுபநேரம் 3.01 - 4.31 வரை. எமகண்டம் 1.31 - 3.01 வரை. குளிகன் காலம் 6.01 - 7.31 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குடும்பவளம், பயணம் தவிர்க்கவும், பணியில் கவனம், எதிர்பாராத பதவி உயர்வு. |
| ரிஷபம் | வெற்றிகள், கனவுகள் நிறைவேறலாம், பூர்வீக சொத்துக்களால் இலாபம், நிம்மதி. |
| மிதுனம் | கழித நன்மை, விரும்பியது கைகூடலாம், கோபம் தவிர்க்கவும், சிக்கனம் தேவை. |
| கடகம் | மனக்களிப்பு, ஆரோக்கியத்தில் பாதிப்பு, எதிர பாராத செலவுகள், குடும்பத்தில் ஒற்றுமை. |
| சிம்மம் | நன்மைகள், வெளிநாடு செல்லும் வாய்ப்பு, பெற்றோர் அனுசரணை, கடன் சுமை குறையும். |
| கன்னி | முயற்சி, வீண்பிரச்சினைகள் வரலாம், வியாபாரத்தில் இலாபம், எதிர்பாராத இடமாற்றம். |
| துலாம் | ஆதரவு, வாழ்க்கையில் முன்னேற்றம், பணியில் கவனம் செலுத்தவும், வாக்குவாதம் தவிர். |
| விருச்சிகம் | போட்டிகள், விருந்துபசாரங்கள், தடைப்பட்டவை நிறைவேறும், சீரான பொருளாதாரம். |
| தனுசு | முன்தினம் போல் கவனம் தேவை, பிரச்சினைகள் தீரும், நண்பர்களிடம் கவனம். |
| மகரம் | கூட்டு முயற்சி, கடன்களால் கவலை, சேமிப்பு கரையலாம், பிரயாணத்தில் கவனம். |
| கும்பம் | எதிலும் வெற்றி, பொன்பொருள் சேரும், கடன் தொல்லை, தனி முயற்சி பலிக்கும். |
| மீனம் | சிறு பயணம், சீரான குடும்ப உறவுகள், சகோதரரால் நன்மை அதிகரிக்கும். |

## இலங்கை உத்தேச அணி நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

செப்டெம்பரில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி -20 தொடருக்கான இலங்கையின் தற்காலிக அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 30 பேர் கொண்ட தற்காலிக அணியே அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட அணியில் எதிர்பார்க்கப்பட்ட அனேகமான வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

மஹேல ஜெயவர்தன, திலகரட்ண டில்சான், குமார் சங்கக்கார, டினேஷ் சந்திமால்,அன்ஜலோ மத்தியூஸ்,லஹிரு திரிமன்ன, நுவான் குலசேகர, திஸ்ஸர பெரேரா, கௌஷால் லொக்குஆராய்ச்சி, சச்சித்திர சேனநாயக்க, லசித் மலிங்க, சாமர கப்புக்கெதர, உபுல் தரங்க, இசுரு உதான, ரங்கன ஹேரத், ஜீவன் மெண்டிஸ், ஷமின்ட எரங்க, அஜந்த மெண்டிஸ், சுராஜ் ரந்தீவ், தம்மிக்க பிரசாத், கு'ால் ஜனித், ஜெஹன் முபாரக், பர்வீஸ் மஹரூப், திலின கண்டம்பி, சாமர சில்வா, டில்ருவான் பெரேரா, கோசல குலசேகர, பிரசன்ன ஜெயவர்தன, நுவான் பிரதீப், அகில தன்தெனிய.

## தொண்டர் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கை, இளைஞர், யுவதிகளின் ஆங்கிலக் கல்வி நடவடிக்கை, உதை பந்தாட்டம், நீச்சல், விளையாட்டுப் பயிற்சி போன்றவற்றுக்கு தொண்டர் அடிப்படையில் ஆலோசனை சேவை வழங்கப்படும்.

இதற்காக பிரிட்டனின் எஸ். எல். வொலண்டயர்ஸ் நிறுவனமும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன.

மஹரகமை சிறிலங்கா யூத் கூட்ட மண்டபத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தலைவரும், மா அதிபருமான சட்டத்தரணி லலித் பியும் பெரேராவும், பிரிட்டன் எஸ். எல். வொலண்டயர்ஸ் நிறுவனச் சார்பில் திட்டப்பணிப்பாளர் லூம நைட்டிங்கேலும் கைச்சாத்திட்டனர்.

எஸ். எல். வொலண்டயர்ஸ் நிறுவனம் ஏற்கனவே 11 நாட்களின் 50 தொண்டர் ஆலோசனை குழுக்களை நாட்டின் இளைஞர் அபிவிருத்தி சமூக அபிவிருத்தி திட்டங்களில் களுத்துறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் முன்னோடி திட்டங்களில் பங்களிப்பு செய்ய வாய்ப்பை வழங்கியுள்ளது.

இதன் மூலம் வ்ளர்ந்து வரும் இளம் வீரர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமையும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக்கில் இருந்து நடால் விலகல்

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இருந்து ஸ்பெயினின் முன்னணி ரென்னிஸ் வீரர் ரபெல் நடால் திடீரென விலகி அதிர்ச்சி அலையை ஏற்படுத்தி இருக்கிறார். ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டியில் பங்கேற்கும் அளவுக்கு தற்போதைய எனது உடல்நிலை இல்லை. இதனால் ஒலிம்பிக்குக்கு செல்லும் ஸ்பெயின் அணியில் இருந்து விலகுகிறேன். நான் அணியின் நலனையும் பார்க்க வேண்டும். சுயநலவாதியாக இருந்து விடக்கூடாது. எனக்குப் பதிலாக இன்னொருவர் சிறப்பாக தயாராவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். கடைசி நிமிடம் வரை ஒலிம்பிக்குக்காக தயாராக முயற்சித்தேன். ஆனால் முடியவில்லை. ஒலிம்பிக் தொடக்க விழாவில் ஸ்பெயின் அணிக்கு தலைமை தாங்கி தேசியக் கொடியேந்தி செல்லும் கௌரவம் எனக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒலிம்பிக் விழாவில் ஸ்பெயினின் தேசியக் கொடியை ஏந்தி செல்ல வேண்டும் என்பது கனவு. அது இப்போது முடியாமல் போய் விட்டது. இதன் மூலம் விலகல் முடிவை நான் எவ்வளவு கஷ்டப்பட்டு எடுத்திருப்பேன் என்பதை நீங்களே உணர்ந்து கொள்ள முடியும். எனது டென்னிஸ் வாழ்க்கையில் சோகமான நாட்களில் இதுவும் ஒன்று என்று கூறியுள்ளார். கடந்த பீஜிங் ஒலிம்பிக்கில் ஒற்றையர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றிருந்த நடால், எந்த வகையான காயத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை. இருப்பினும் அவர் கால்முட்டி பிரச்சினையால் அவதிப்பட்டு வருவதாக தெரிகிறது எனத் தெரிவித்தார்.



## தரவரிசையில் முதலிடம் இந்தியாவுக்கு வாய்ப்பு

(டுபாய்)

ஐ.சி.சி. ஒரு நாள் போட்டி அணிகளின் தரவரிசையில் இந்திய அணி 4ஆவது இடத்தில் இருந்து முதலிடத்திற்கு முன்னேற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.இரு அணிகளுக்கு இடையே 5 ஒரு நாள் போட்டியும், ஒரே ஒரு ருவென்ரி -20 போட்டியும் நடைபெறுகிறது. முதலாவது ஒரு நாள் போட்டி அம்பந்தோட்டையில் இன்று (மதியம் 2.30 மணி) நடக்கிறது.

இலங்கைக்கு எதிரான தொடரை இந்திய அணி 5-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றினால், சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) ஒரு நாள் போட்டி அணிகளின் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

ஒரு நாள் போட்டி அணிகளின் தரவரிசை வருமாறு:- 1. அவுஸ்ரேலியா (119 புள்ளி), 2.தென்னாபிரிக்கா (118 புள்ளி), 3.இங்கிலாந்து (118 புள்ளி), 4.இந்தியா (117 புள்ளி), 5.இலங்கை (112 புள்ளி), 6.பாகிஸ்தான் (103 புள்ளி); 7. மேற்கிந்தியத்தீவு (87 புள்ளி), 8.நியூசிலாந்து (83 புள்ளி).

இது குறித்து கருத்துத் தெரிவித்த டோனி, போட்டியில் வெல்ல வேண்டும் என்பதே எமது முதல் இலக்கு. அவ்வாறு வெல்லப்படும் பட்சத்தில் சாதனைகள் இயல்பாகவே வரும் என்பது பொதுவானதே எனத் தெரிவித்தார்.

## பருவகால போட்டி அறிவிப்பு

(சிட்னி)

2012–13 பருவகாலத்திற்கான அவுஸ்ரேலியாவில் இடம்பெறவுள்ள போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தாண்டு நவம்பரிலிருந்து அடுத்தாண்டு பெப்ரவரி வரையிலான போட்டிகளின் விபரங்களே அறிவிக்கப்பட்டுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள போட்டிகளின் விபரங்களின் அடிப்படையில் தென்னாபிரிக்க, இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் அவுஸ்ரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளன.

தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட் போட்டிகளுக்காகவும், இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 2 ருவென்ரி –20 போட்டிகள் கொண்ட முழுமையான தொடருக்காகவும், மேற்கிந்தியத் தீவுகள் 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ஒரு ருவென்ரி –20 சர்வதேசப் போட்டி அடங்கிய தொடரிலும் பங்குபற்றுவதற்காக அவுஸ்ரேலியாவிற்குச் செல்லவுள்ளன.

போட்டி விபரங்கள்:

நவம்பர் 9–12: தென்னாபிரிக்கா எதிர் அவுஸ்ரேலியா – 1ஆவது டெஸ்ட்

நவம்பர் 22–26: தென்னாபிரிக்கா எதிர் அவுஸ்ரேலியா – 2ஆவது டெஸ்ட்

நவம்பர் 30–டிசெம்பர் 4: தென்னாபிரிக்கா எதிர் அவுஸ்ரேலியா – 3ஆவது டெஸ்ட்

டிசெம்பர் 14–18: அவுஸ்ரேலியா எதிர் இலங்கை – 1ஆவது டெஸ்ட்

டிசெம்பர் 26–30: அவுஸ்ரேலியா எதிர் இலங்கை – 2ஆவது டெஸ்ட்

ஜனவரி 3–7: அவுஸ்ரேலியா எதிர் இலங்கை – 3ஆவது டெஸ்ட்

ஜனவரி 11, 13, 18, 20, 23: அவுஸ்ரேலியா எதிர் இலங்கை ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்.

ஜனவரி 26, 28: அவுஸ்ரேலியா எதிர் இலங்கை ருவென்ரி –20 சர்வதேசப் போட்டிகள். பெப்ரவரி 1,3,6,8,10 : அவுஸ்ரேலியா எதிர் மேற்கிந்தியத் தீவுகள் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்

பெப்ரவரி 13: அவுஸ்ரேலியா எதிர் மேற்கிந்தியத் தீவுகள் ருவென்ரி–20 சர்வதேசப் போட்டி.

## புதிய பயிற்றுநர் நியமனம்

(ஹமில்டன்)

நியூசில்ாந்து அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக மைக் கெஷன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய பயிற்றுவிப்பாளர் ஜோன் ரைட் தமது பதவியில் இருந்து அடுத்த மாதம் விலகவுள்ள நிலையில் புதிய பயிற்றுவிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். நியூசிலாந்தில் பிறந்த மைக் கெஷன் ஒட்டாக்கோ மாகாணத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருந்தார்.



## பதக்கம் வெல்லப்போராடுவோம்

(புதுடில்லி)

ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்ல வேண்டும் என்பதே எமது இலக்கு. ஏனெனில் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் நானும், போபண்ணாவும் ஜோடியாகியிருக்கின்றோம். இது எமக்குக் கிடைத்த வெற்றி என்பதை விட நாட்டுக்கு இதன் மூலம் பெருவெற்றி கிடைக்க வேண்டும் என்பது எமது இருவரது நோக்கமாகும். அந்த இலக்கை நோக்கி இறுதி வரை தளராது பயணிப்போம் என மகேஷ் பூபதி தெரிவித்தார்.

## குக் சதம், இங்கிலாந்து வலுவான ஆரம்பம்



(ஓவல்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில், அலெஸ்டர் குக் சதம் அடித்து கைகொடுக்க, இங்கிலாந்து அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையை நோக்கிப் பயணிக்கின்றது.

இங்கிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து கப்டன் ஸ்ரோஸ், முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

முதல் இனிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு ஸ்ரோஸ் (0) ஏமாற்றினார். பின் இணைந்த ட்ராட், அலெஸ்டர் குக் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. தென்னாபிரிக்க பந்துவீச்சை எளிதாக சமாளித்த ட்ராட் அரைசதம் அடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 170 ஓட்டங்களைச் சேர்த்த போது ட்ராட் (71) ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அபாரமாக ஆடிய குக், சதம் அடித்தார். இது இவரின் 20ஆவது டெஸ்ட் சதமாகும் அமைந்தது. இறுதியில் இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, மூன்று விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் குக் ஆட்டமிழக்காது 114 ஓட்டங்களைப் பெற்றார். பீற்றர்சன் 42 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் எம். மோர்க்கல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றும் பட்சத்தில் டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் நிலைக்கு முன்னேற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தொடரை இழக்காமல் இருக்கும் பட்சத்திலேயே முதல் நிலை இடத்தைத் தொடர்ந்தும் இங்கிலாந்து அணியால் தக்கவைக்க முடியும்.

## 100 மீற்றரில் தங்கம் எமது நாட்டுக்கே

ஒலிம்பிக் போட்டியில் நான் தங்கம் வெல்வேனோ அல்லது உசைன் போல்ட் வெல்வாரோ என்பதற்கு அப்பால் அத்தங்கம் எமது நாட்டுக்குக் கிடைக்கப்போவதில் மகிழ்ச்சியே என யோஹன் பிளேக் தெரிவித்துள்ளார்.

ஜமேக்காவின் உள்ளூர்ப் போட்டிகளில் உலக சாதனையாளர் உசைன் போல்ட்டை 100 மீற்றர், 200 மீற்றர் போட்டிகளில் தோற்கடித்ததன் மூலம் இவ்வாண்டு ஒலிம்பிக்கில் கவனிக்கப்பட வேண்டிய ஒரு வீரராக யோஹன் பிளேக் மாறியுள்ளார். இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள யோஹன் பிளேக், வெற்றிபெற்றாலோ தோல்வியடைந்தாலோ இருவரும் நண்பர்களே எனத் தெரிவித்தார். உசைன் போல்ட்டும் போட்டிகளை வெல்ல விரும்புகிறார், நானும் வெல்ல விரும்புகிறேன். ஆனால் என்ன நடந்தாலும் இருவரும் நண்பர்களே என அவர் தெரிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை தனது பாடசாலைப் பயிற்றுவிப்பாளரிடம் பயிற்சிபெற்று வந்த யோஹன் பிளேக், அதன் பின்னர் உசைன் போல்ட்டுடன் இணைந்து கிளென் மில்ஸ் என்ற பயிற்றுவிப்பாளரின் கீழ் பயிற்சி பெற்று வந்தார். இந்த மாற்றம் தனது வாழ்க்கையில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தியதாகத் தான் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தின் இறுதிப் போட்டி ஆகஸ்ட் 5ஆம் திகதியும், 200 மீற்றர் ஓட்டத்திற்கான இறுதிப் போட்டி ஆகஸ்ட் 9ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது. மிகவும் எதிர்பார்க்கப்படும் போட்டியாக இது அமைந்துள்ளது.

உலகின் வேகமான மனிதரான உசைன் போல்ட் தனது ஒலிம்பிக் பதக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வாரா அல்லது புதியவரான யோஹன் பிளேக் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொள்வாரா அல்லது இன்னுமொருவர் புதிதாகப் பெற்றுக் கொள்வாரா என்ற எதிர்பார்ப்புத் தொடர்ந்தும் நிலவுகிறது.

# தேசிய ரீதியில் சாதிக்க ஆட்டத்திறன், ஒழுக்கம் அவசியம்

## யூனியன் கல்லூரியின் வலைப்பந்து பயிற்றுநர் ஜெயந்தி ஜெயதரன்



(தெல்லிப்பளை)

தொடர் பயிற்சி, வீராங்கனைகளின் சிறந்த ஆட்டத் திறன்,ஒழுக்கம் இவையே நாம் தேசிய ரீதியில் தொடர்ந்து சாதிக்கத் துணை புரிகின்றது என தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வலைப்பந்தாட்ட பயிற்றுநர் திருமதி ஜெயந்தி ஜெயதரன் தெரிவித்தார்.

மக்கள் வங்கி அனுசரணையுடன் இலங்கை வலைப் பந்தாட்டச் சங்கம் தேசிய ரீதியில் நடத்திய வலைப் பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்றமை தொடர்பாக எமது செய்தியாளர் தயாளபாலன் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அணிகள் கடந்த 15 வருடங்களாக மாகாண மட்ட சம்பியன்களாகவும், தேசிய மட்டம் வரை சென்று, சர்வதேச ரீதியிலும் விளையாடி வருகின்றது.

இதற்கு தொடர் பயிற்சி, வீராங்கனைகளின் சிறந்த ஆட்டத் திறன், ஒழுக்கம் என்பனவே முக்கிய காரணம். நாம் இந்த வெற்றிகளைப் பெற முடிந்தமையும் எமது கல்லூரி அதிபர், உப அதிபர் பிரதி அதிபர், சக ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கோட்ட, வலயப் பணிப்பாளர்கள் என அனைவரினதும் ஒத்துழைப்பும் இவ்வெற்றிக்கு துணை நின்கின்றமை மறக்க முடியாத உண்மை.

கடந்த 2005இல் தேசிய மட்டத்தில் மூன்றாமிடமும், வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் கட்டுநாயக்காவில் நடைபெற்ற 19 வயது பிரிவுக்கான தேசிய மட்டப் போட்டியில் இரண்டாமிடமும், இதே வருடம் மே மாதம் இடம்பெற்ற மகரகம தேசிய இளைஞர் பேரவையினால் நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டமை எமது உழைப்புக்கு கிடைத்த வெற்றி.

இவ்வாறான தொடர் வெற்றிகள் மூலம் சர்வதே ரீதியிலான சுற்றுப் போட்டிகளிற்கு அழைப்பு கிடைக்கப் பெற்று 2008, 2010ஆம் ஆண்டுகளில் மலேசியாவில் Chains Urivercity யில் நடைபெற்ற சர்வதேச வலைப்பந்து சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றி காலிறுதி வரை முன்னேறினோம். அரையிறுதிக்கு ஒரு புள்ளியில் வாய்ப்பை இழந்தோம். ஆனாலும் எனது கனவு தேசிய ரீதியில் முதலாமிடம் பிடிப்பது என்பதுதான். இது நீண்ட நாள் கனவு நனவானதையிட்டு மன மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நீண்ட நாள் கனவு துர்க்கையம்மன் ஆசீர்வாதத்துடன் நிறைவேறியதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். மக்கள் வங்கி அனுசரணையுடன் இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட வலைப்பந்தாட்டப்போட்டியில் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் நாம் விளையாடினோம். இருப்பினும் இதில் கிண்ணம் வெல்லாமல் போனது மனவருத்தமாக இருந்தாலும் இத்தொடரில் எமது வீராங்கனைகள் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி அனைவரது கவனத்தையும் ஈர்த்துப் பாராட்டைப் பெற்றனர். சர்வதேச ரீதியில் பல வெற்றிகளைப் பெறவேண்டும் என்பதோடு, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சார்பாக பல வீராங்கனைகள் தேசிய வலைப்பந்தாட்ட அணியில் இடம்பிடிக்கும் நிலையை உருவாக்க வேண்டும் என்பதே எமது இலக்காக உள்ளது. அதனை நோக்கிய பாதையில் பயணிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (93)




# சஜித் சிறப்பான துடுப்பாட்டம் மானிப்பாய் இந்து அபார வெற்றி

(மானிப்பாய்)

சஜித்தின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி அபாரமான வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி நடைபெற்ற போட்டி ஒன்றில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சஜித்தின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 323 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பாக ஆடிய சஜித் 97 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 100 ஓட்டங்களையும், டிலக்ஷன் 39, சஜீபன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திருமாள், வினோஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 324 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கரவெட்டி விக்னேஸ்வரா அணி மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீரர்களின் பந்து வீச்சை எதிர்கொள்ளத்திணறியதுடன் 99 ஓட்டங்களை அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. இதில் சஞ்சீவன் மட்டும் 42 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டிலக்ஷன், நிரோஜ்குமார், சஜீபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.(எஸ்.பி.)

## கிளிநொச்சி மத்திய கல்லூரியை வென்றது மகாஜனாக் கல்லூரி

(தெல்லிப்பளை)

கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டி மகாஜனாக்கல்லூரி அணியும், கிளிநோச்சி மத்திய கல்லூரி அணிக்குமிடையில் நடைபெற்றது.

மழை காரணமாக 30 பந்துப்பரிமாற்றங்களாக மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதற்கமைய துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி 18 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்கையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரியாக 25 ஓட்டங்கள் பெறப்பட்டது. துடுப்பாட்டத்தில் அஜீபன் 25 பந்துகளில் 22 ஓட்டங்களையும் கபில்ராஜ் 23 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கஜந்தன் 5 பந்துப்பரிமாற்றங்களை வீசி 17 ஓட்டங்களைக்கொடுத்து 6 இலக்கையும் ரசிகரன் 3 பந்துப்பரிமாற்றங்களை வீசி 11 ஓட்டங்களைக்கொடுத்து 2 இலக்கையும் கைப்பற்றினர்.

89 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய மகாஜனா 7.5 ஓவர்களில் 2 இலக்கை இழந்து 89 ஓட்டங்களைப்பெற்று 8 இலக்குகளால் அமோக வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் சாரங்கன் 27 பந்துகளில் 46 ஓட்டங்களையும் ரசிகரன் 17 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜனுசன், ஜெனித்தன் ஒரு இலக்கை கைப்பற்றினர். (93)

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மென்பந்து கிரிக்கெட்டில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

90ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களங்களுக்கிடையில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அணிக்கு ஏழு பேரைக் கொண்ட இப்போட்டித் தொடர் ஏழு ஓவர்களைக் கொண்டதாக நடத்தப்பட்டது.

கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குகொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அணியை எதிர்த்து யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அணியும் மோதின.

கடந்த 16ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ் இறுதிப் போட்டியில் முதலில் ஆடிய யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அணி யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறியது. இறுதியில் அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்கை அடையவில்லை.

பதிலுக்கு 39 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அணி தயாளனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் ஒரு விக்கெட்டை இழந்து யாழ். மாவட்ட அபிவிருத்தித் திணைக்கள அணி 41 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதில் தயாளன் 20, செல்வாக்குமார் 12 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் அணித் தலைவர் வி.கே. அருந்தவநாதன் 9 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டி நிகழ்வில் ஏராளமான கூட்டுறவுப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## வடமாகாண மட்ட வலைப்பந்து, கால்பந்து

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத்திணைக் களத்தினால் நடத்தப்படவுள்ளமாகாண மட்ட கால்பந்து, வலைப்பந்துப்போட்டித் தொடர் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளதாக விளையாட்டுத் திணைக்கள வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

வலைப்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும்,கால்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கிலும் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டிகளில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டித் தொடர்களின்இறுதிப் போட்டிகள் நாளைய தினமே இடம் பெறும் என்றும் தகுதி பெற்ற அனைத்து அணிகளையும் போட்டிகளில் பங்குபற்றுமாறும் வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் அண்ணாத்துரை கேட்டுள்ளனர். (எஸ்.பி.)



# இலங்கையை சீனாவின் அணைப்புக்குள் இருந்து விடுவிக்கும் முயற்சியில் அமெரிக்காவும் இந்தியாவும்

**- சிமோன் டென்யர் கட்டுரையிலிருந்து.**

நீண்ட காலமாக இருந்துவந்த முட்டுக்கட்டைக்குப் பிறகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசாங்கம் புலிகளுடனான போரை முன்னொருபோது மில்லாத இரக்கமற்ற தன்மையுடன் நடத்தியது.

20 மில்லியன் மக்கள் தொகையினைக் கொண்ட இந்த நாட்டை ஆட்டிப்படைத்த

உலகின் மிக்ப் பெரியதும் மற்றும் அபாயகரமானதுமான பயங்கரவாத அமைப்பை தோற்கடித்து மூன்று தசாப்தங்களாக நடைபெற்று வந்த உள்நாட்டுப்போரை



முடித்துவைத்ததன் மூலம் வெப்பமண்டல இந்து சமுத்திர தீவாகிய இலங்கை ஒரு பிரகாசமான புதிய விடியலுக்கு வித்திட்டது. அதன் பொருளா-தாரம் ஆசியாவிலே வேகமாக வளர்ந்து வருவன வற்றில் ஒன்றாக உள்ளதுடன், சுற்றுலாத்துறையும் பெருகி வருகிறது.


ஆனால் போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் நிறைவடைந்ததன் பின்னர், மனித உரிமைக் குழுக்களும் மற்றும் எதிர்க்கட்சிகளும் நாடு சர்வாதிகாரத்தை நோக்கிச் சாய்கிறது என எச்சரிக்கின்றன.

இலங்கையின் இரண்டு பிரதான வர்த்தகப் பங்காளி களான அமெரிக்காவும் மற்றும் இந்தியாவும் இதை பெருமளவில் வேறு விதமாகப் பார்க்கின்றன. இரண்டு நாடுகளும் யுத்தத்துக்கு பிந்திய சமரச முயற்சிகளையிட்டு பெரிதும் அதிருப்தி வெளியிட்டிருப்பதுடன் மனித உரிமைகளை இன்னும் அதிகளவில் பாதுகாக்குமாறு வலியுறுத்தி வருகின்றன.

அதே நேரம், கொழும்பு அரசாங்கம் சீனா மற்றும் ஈரான் என்பனவற்றுடன் நெருங்கிய பொருளா-தார மற்றும் இராஜரீக உறவுகளைப் பேணி வருவதால் வாஷிங்டன் மற்றும் புதுடில்லி என்பன இலங்கையுடனான அதன் செயல்திறனை மட்டுப்படுத்தி அதனை ஓரங்கட்டி வருவது அதிகரித்துள்ளது.

“இலங்கை அரசாங்கத்தின் பயணத்துக்கு சாதகமாகவே காற்று வீசுகிறது. அத்துடன் நாட்டின் எதிர்காலத்தை தங்கள் சொந்த விருப்பப்படியே வரையறுக்க அவர்கள் விரும்புகிறார்கள்” என்கிறார் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் பாதுகாப்பு கற்கைகள் பீடத்தில் கற்பித்துவரும் ஹர்ஸ் வி பான்ட். “இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற வெளியாட்கள் உள்ளூரில் எந்த விடயத்திலும் செல்வாக்கு செலுத்துவது மிகவும் கடின மாக இருக்கப் போகிறது. மற்றும் சர்வதேச நிறுவனங் களால் இலங்கைக்கு ஏதாவது பிரச்சினைகள் இருக்குமாயின் அதற்காக சீனாவில் தங்கியிருக்க முடியும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்”.

தங்கள் அதிகாரத்தின் உச்சத்தில் இருந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரீ.ரீ.ஈ), தமிழர்கள் ஆதிக்கத்திலுள்ள இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை ஒரு சிறிய மாநிலத்துக்கு நிகராக நடத்தி பரந்தளவில் கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். ஆனால் அவர்கள் தீவில் வாழும் இந்து மற்றும் கிறிஸ்தவ தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை தற்கொலை குண்டுதாரிகள், மற்றும் சிறுவர் போராளிகள் தொடர்புடைய ஒரு போராட்டமாக மாற்றியிருந்தார்கள், ஆயிரக்கணக்கான மிதவாத தமிழர்கள். ஒரு இலங்கை ஜனாதிபதி மற்றும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியை 1991இல் கொலை செய்தது உட்பட, தங்கள் வழியில் தடையாக நிற்கும் எவரையும் கொலை செய்து வந்தார்கள். ஆனால் பயங்கரவாதம் மற்றும் போர் என்பனவற்றை ஒழித்ததுக்காக ராஜபக்ஷ



தீவின் பெரும்பான்மையினரான பௌத்த சிங்களவரிடையே அளவற்ற பிரசித்தம் பெற்றுள்ளார். ஆனால் சமாதானத்தை வீணடித்து ஆபத்தில் சிக்கியுள்ளதாக விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள்.

யுத்தத்தின் பின்னர் ஜனாதிபதி ராஜபக்ஷ எல்.எல்.ஆர்.சி என அழைக்கப்படும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தபோது, மனித உரிமைகள் குழுக்கள் தெரிவு செய்யப்பட்ட அந்த ஆணையத்தை பற்றி குறைவான எதிர்பார்ப்பு களையே கொண்டிருந்தாலும், நம்பிக்கையின் சிறு பொறி தோன்றியிருந்தது.

மார்ச் மாதம் இந்தியாவின் பின்துணையுடன் அமெரிக்க அனுசரணையுடன் இலங்கை அதன் சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தவேண்டும் எனக்கோரும் தீர்மானம் ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, கடந்த ஜனவரியில் ராஜபக்ஷவுடன் ஒரு சந்திப்பை நடத்தியபின், தமிழர்களின் வடபகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியினை வழங்கும் நாட்டின் 25 வருட பழமை யான அரசியலமைப்பின் திருத்தத்துக்கு மதிப்பளிப்பதாக ஜனாதிபதி தனக்கு உறுதி அளிவித்திருப்பதாக தெரிவித்தார். கிருஷ்ணா நாட்டை விட்டு வெளியேறிய உடனேயே, ராஜபக்ஷ தான் ஒருபோதும் அப்படியான ஒரு வாக்குறுதியை வழங்கவில்லை என மறுப்பு வெளியிட்டு இந்தியாவின் கோபத்தை கிளறினார்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்த அரசாங்கம் ஆவலாக உள்ளது, ஆனால் வெளிநாட்டின் அடக்குமுறைகளின் கீழ்



அல்ல என்று தெரிவித்தார். ஆனால் ராஜபக்ஷவின் சொந்தத் தொகுதியான அம்பாந்தோட்டவில் உள்ள ஒரு புத்தம் புதிய ஆழ்கடல் துறைமுகம் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கான ஒரு துப்பை வெளிக்காட்டுகிறது. அந்த துறைமுகம் சீனர்களால் நிதியுதவி வழங்கப்பட்டு கட்டுமானப்பணி நடைபெற்று வரும் பல உட்கட்டமைப்பு திட்டங்களில் ஒன்று, மற்றும் அது இந்து சமுத்திரத்தின் கொல்லைப் புறத்தில் விரும்பத்தகாத ஒரு சீன ஊடுருவல் என்று இந்திய அரசாங்கத்தின் ஆழமான வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் போரை முடித்து வைப்பதற்கு உதவும் கருவியாக சீனாவின் ஆயுதங்கள் பெரிதும் பயன்பட்டன. இப்போது சீனாவின் ஆதரவு அரசாங்கம் தனது எதிர்காலத்தை வடிவமைக்க அனுமதியளிக்கிறது.

ஆனால் இந்த சவால்களையும் தாண்டி அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையுடன் ஈடுபாடு கொள்வதில் உறுதியாக உள்ளன என்று இராஜதந்திரிகளும் அதிகாரி களும் தெரிவிக்கின்றனர். இலங்கை பர்மாவின் பா[illegible]யை பின்பற்றி மேற்கிலிருந்து தனிமைப்படுவதை அதிகரித்துக் கொள்வதை அல்லது சீனாவின் அணைப்புக்குள் மிகவும் ஆழமாகத் தள்ளப்படுவதை இந்த இரு நாடுகளுமே விரும்பவில்லை என அதிகாரி கள் தெரிவித்தனர்.

**- நன்றி: வாஷிங்டன் போஸ்ட்**

---

அந்தப் பெட்டிதான் என்னை வீட்டிலிருந்தும் அறைகளிலிருந்தும் துரத்தியதென்பதை நான் முதலில் அறியவில்லை. 18 வயதில் எனது அப்பாவை தாக்கிவிட்டு வீட்டை விட்டு வெளியேறிய போது என்னுடன் அந்தப் பெட்டியின் பயணம் தொடங்கியது. கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்ட போது என் அறையிலிருந்த அந்த பெட்டி சாலையில் தூக்கி எறியப்பட்டது. அதன் பின்பும் நான் அந்தப் பெட்டியுடனேயே அடைக்கலம் தேடி பல்வேறு ஊர்களுக்கிடையே அலைந்திருக்கிறேன். ஒரு இடத்திலும் நிம்மதியாக நீண்டகாலம் நிலைத்திருக்க முடிந்ததில்லை. எனக்கு முன்பாகவே பெட்டி அங்கிருந்து வெளியேறக் காத்திருக்கும் போலும். நான் பெட்டியுடன் வெளியேறும் போதெல்லாம் உடல் வலிக்கும். ஒரு நிராதரவின் சுமையுடன் அப்பெட்டி அகால இரவுகளில் என் கையில் கனத்திருக்கிறது. எனது உடைந்த நினைவுகள் பரிசுகள் நட்புகள் சந்தர்ப்பங்கள் அனைத்தின் சுவடுகளும் கடிதங்களும் புகைப்படங்களும் அந்தப் பெட்டியில் உண்டு. அந்தப் பெட்டியின் மேல்மூடி விளிம்பு தேய்ந்து உடையவும் தொடங்கியிருந்தது. சாலமன் கிரண்டியைப் போல புதன்கிழமை எனக்கு திருமண-மானது. வெள்ளிக்கிழமை உறவில் விரிசல் ஏற்பட்டது. திரும்பவும் எனது பெட்டியுடன் வெளியில் வலியுடன் சுற்றத்தொடங்கினேன். அதில் என் குட்டி மகளின் உடைகள் ஞாபகத்தில் சேர்ந்திருந்தன. அப்போது தான் பெட்டி மிகவும் கனக்க தொடங்கியதை உணர்ந்தேன். ஒரு அறைக்கு கொண்டு சென்று வைத்தபின்பும் நான் போகும் வெவ்வேறு அறைகளில் அந்தப் பெட்டி எனக்கு முன்பே தென்படத் தொடங்கியது. இந்தப் பெட்டியுடனான எனது அசட்டு உறவை எனது நண்பனிடம் ஒரு இரவில் கதைபோல் சொல்லத் தொடங்கினேன். எனது துயரம் அனைத்துக்கும் இந்தப் பெட்டியுடன் தொடர்புடையது என்றான். அப்போது அவனது சொல் மந்திரம் போல் இருந்தது. ஒரு மனி தனை சிதைத்துக் கொல்வது போல அந்தப் பெட்டியை காலால் மிதித்து நொறுக்கினோம். ஒரு உடலைக் கிழிப்பது போல கிழித்தோம். என் கைகளில் சிராய்ப்பு ஏற்பட்டது. இருந்தும் வெறியுடன் அந்தப் பெட்டியை துவம்சம் செய்தேன். முஷ்டிக்காயத்தில் இரத்தம் பொழிய ஒரு குழந்தைபோல பெட்டியை சுமந்தேன். கட்டடத்தின் உச்சிக்கு சென்று பெட்டியைத் தூக்கி வீசியெறிந்தோம். எனது சட்டையில் இரத்தச்சுவடுகள் இருந்தன. அந்தப் பெட்டியுடன்..... எனது பதினேழு வருடங்கள்.




## பெட்டி

**- ஷங்கர்ராமசுப்ரமணியன்.**

---

## உயர் அழுத்த மின்சாரத்தைக் கடத்தும் கம்பிகளில் இருந்து ஒலி ஏற்படுவதின் காரணம் என்ன?



உயர் அழுத்த மின்சாரத்தைத் தாங்கிச் செல்லும் கம்பிகளை உடைய கோபுரக் கம்பங்களின் அருகே நின்றால் ஒரு வகை ஒலி கேட்கும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று தான். இந்த ஒலி உண்டாவதற்கு கம்பியில் செல்லும் மின்னோட்டம் காரணமல்ல. நரம்பிசைக் கருவிகளில் உள்ள தந்திகளில் தடை ஏற்படும் போது ஒலி எழும்புவதை நம்மால் அறிய முடியும். கோபுரங்களுக்கு இடையே செல்லும் மின்கம்பிகள் மிக விரைந்து வீசும் காற்றின் காரணமாக ஒத்ததிர்வுக்கு ஆட்படுகின்றன. எனவே தான் மின்கம்பிகளில் ஒலி உண்டாகிறது. இவ்வொலியே வண்டுகள் ரீங்காரம் செய்யும் ஒலியைப் போல நமக்குக் கேட்கிறது.

# கால்களை மிருதுவாக்கும் மீன்கடி வைத்தியம்!



அதிக தூரம் நடப்பதால் சிலருக்கு பாதங்கள், விரல்களில் வலி ஏற்படும். பாதங்களை தடவி கொடுத்தாலோ, விரல்களில் சொடக்கு போட்டாலோ, ஒருவித இதமான சுகம் ஏற்படும். ஆனாலும், சிறிது நேரத்திலேயே, மீண்டும் வலி ஆரம்பித்து விடும்.

இப்படிப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், பாதங்களை அழகாக வைத்துக் கொள்ள விரும்புவோருக்காகவும், பிரத்தியேகமாக ஒரு சிகிச்சை முறை, உலகின் பல நாடுகளில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'மீன் ஸ்பா' என, அழைக்கப்படும் இந்த சிகிச்சை முறையில், ஒரு சிறிய தொட்டிக்குள் தண்ணீரை நிரப்பி, அதற்குள், 'கர்ரா ரூபா' என்ற வகை சிறிய மீன்களை உலவ விடுகின்றனர். பின், பாதங்களை அழகாக்க விரும்புவோரின் கால்களை, அந்த தொட்டிக்குள் விடுகின்றனர்.

குறிப்பிட்ட சில நிமிடங்களுக்குப் பின், கால்களை தொட்டியில் இருந்து வெளியில் எடுத்து விடலாம். மீன் கடிக்குப் பின், பாதங்கள் மிக அழகாக தோன்றுவதுடன், ஏற்கனவே அவற்றில் இருந்த வலி எல்லாம் மறைந்து, புத்துணர்வு ஏற்படுவதாகவும் கூறுகின்றனர்.


ஜப்பான், குரேஷியா, பெல்ஜியம், சீனா உள்ளிட்ட நாடுகளைத் தொடர்ந்து, இந்தியாவிலும் இந்த மீன்கடி வைத்தியம் பிரபலமாகி வருகிறது.

# அம்ரபாலி


இந்திய ரயில் ஒன்றுக்கு "அம்ரபாலி எக்ஸ்பிரஸ்" என்று பெயரிடப்பட்டுள்ளது. அம்ரபாலி என்பவர் பீகாரில் வைஷாலிக் குடியரசில் அரசவை நாட்டியக் கலைஞராக இருந்தவர். இவரது தாய், தந்தை யார் என்பது தெரியவில்லை. ஒரு மாமரத்தின் கீழே குழந்தையாகக் கண்டெடுக்கப்பட்டவர்.

"அம்ரா" என்றால் மாம்பழம் என்று அர்த்தம். "பாலி" என்றால் வளரும் துளிர் என்று அர்த்தம். மாமரத்தின் கீழ் கண்டெடுக்கப்பட்டதால் அவர் "அம்ரபாலி" என்று அழைக்கப்பட்டார்.


அரசவைக் கலைஞராக இருந்த அம்ரபாலி புத்தரின் போதனைகளைக் கேட்டு புத்த சமயத்து துறவி யானார். இவரது நினைவுகளைச் சிறப்பிக்கும் வகையிலும், புத்த சமயத் துறவியாக ஆற்றிய தொண்டுகளை நினைவுகூரும் வகையிலும், "அம்ரபாலி எக்ஸ்பிரஸ்" எனப் பெயர் சூட்டப்பட்டது.



# தாய்மை!



தன் குஞ்சு நாயிடம் மாட்டிக் கொண்டு விட்டதை மரத்தின் மேலிருந்து காண்கிறது தாய் அணில்.



உடன் நடவடிக்கையில் இறங்குகிறது.



நாய் தாய் அணிலைப் பிடிக்க முனைகையில் அணில்குஞ்சு தப்பியோடு கிறது.




குஞ்சைக் காப்பாற்றிக் கொண்டு மரத்திலேறி விட்டது தாய். ஆனால்... நாயின் முகத்தில் தெரியும் உணர்ச்சிகளைப் பாருங்கள்! "அணிலேற விட்ட நாய்" என்பது இதுதானா? இந்தக்கவிதைக் கணங்களைக் கமெராவிற்குள் கைப்பற்றிக் கொண்டவருக்கு என்ன பரிசு கொடுத்தால் தகும்!

# ஏன் கைகளைக் கட்டினால் ஓடுவது கஷ்டம்?



கைகள், கால்கள் ஆகியவை முன்னும், பின்னும் ஒருங்கிணைந்து இயங்குவதால் நம்மால் நடக்கவும் ஓடவும் முடிகிறது. சாதாரணமாக நின்றுகொண்டிருக்கும் போது உடலின் ஈர்ப்பு மையம் நமது காலடியில் விழும். இதனால் நமது உடல் சமநிலையில் நிற்க முடிகிறது. நடக்கும்போதும், ஓடும்போதும் கால்கள் இயல்பு நிலையில் இருந்து மாற்றம் பெறுவதால் ஈர்ப்பு மையம் முன்னோக்கிச் செல்லும். இந்நிலையில், நமது கைகள் கட்டப்பட்டிருக்குமானால் உடலின் சமநிலை தடுமாறி கீழே விழ நேரிடும். மேலும், இயல்பாக நடக்கும்போதோ, ஓடும்போதோ, இந்நிலை ஏற்படாதற்குக் காரணம், நமது கை கால்கள் முன்னும் பின்னும் மாறி மாறி இயங்குவதனால், ஈர்ப்பு மையம் உடலின் அடிப்பகுதியிலேயே நிலைபெற்றிருக்கு மாறும், அதனால் உடலின் சமநிலை தடுமாறாதவாறும் பார்த்துக்கொள்ளப் படுகிறது.

ஆனால் கைகள் கட்டப்பட்ட நிலையில் நடக்கும்போதும், ஓடும்போதும் மேற்கூறிய சமநிலை பராமரிக்கப்படுவதில்லை. எனவே அந்நிலையில் ஓடுவதோ அல்லது நடப்பதோ மிகவும் கடினமான செயலாகிவிடுகிறது.



# பெட்ரோலில் இயங்கும் இயந்திரங்களை டீசலில் ஏன் இயக்க முடியாது?

பெட்ரோல், டீசல் ஆகிய எரிபொருட்களைக் கொண்டு இயங்கும் இரு இயந்திரங்களும் ஒரே மாதிரி யானவை தான். இருப்பினும் இரண்டும் வெவ்வேறு வடிவ அமைப்புகளைக் கொண்டவை. ஒவ்வொரு எரிபொருளும் ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் தான் எரியத் தொடங்கும். இதனைப் பற்றல் வெப்பநிலை என்பர். இது பெட்ரோலுக்குக் குறைவாகவும், டீசலுக்கு மிகுதியாகவும் தேவைப்படும்.

அடுத்து பெட்ரோல் இயந்திரத்தில் எரிபொருள்-காற்றுக் கலவையைப் பற்றவைக்கும் செயலை மேற்கொள்வது தீப்பொறிச்செருகி ஆகும். மேலும், இவற்றில் எரிபொருள்-காற்றுக் கலவையைப் பற்ற வைப்பதற்கு முன்னால் தேவைப்படும் அழுத்த அளவு அதாவது அழுத்த விகிதம் குறைவு. இந்நிலையில், பெட்ரோல் இயந்திரத்தில் டீசலை எரிபொருளாகப் பயன்படுத்தும்போது பற்ற வைக்கும் வெப்பநிலை போதுமான அளவு இல்லாத காரணத்தால் எரிபொருள் பற்றவே பற்றாது.

அடுத்து டீசல் இயந்திரத்தில், பெட்ரோல் இயந்திரத்தில் இருப்பது போல் தீப்பொறிச்செருகி கிடையாது. இங்கு எரிபொருள் பற்றவைப்பு மிகுந்த அழுத்தத்தின் விளைவாக நடைபெறும். இவ்வாறு பெட்ரோல், டீசல் இயந்திரங்களுக்கு இடையேயுள்ள வடிவமைப்பு வேறுபாட்டினாலும், பற்றவைப்பு வெப்ப நிலை வேறுபாட்டினாலும் பெட்ரோலுக்குப் பதிலாக டீசலையோ, டீசலுக்குப் பதிலாகப் பெட்ரோலையோ பயன்படுத்த இயலாது.




**தினமுரசின் புதிர்ப்போட்டியில்**
**நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்!**

சரியான விடை எழுதுபவர்களது விபரங்கள்
புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவரவுள்ளது.

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.





## 1 பொது அறிவு துணுக்குகள்

01) பாலைவனங்கள் இல்லாத கண்டம் எது?
(.............................................)

02) புல் இனத்தின் மிகப்பெரிய தாவரம் எது?
(.............................................)

03) உலகில் இறப்பு வீதம் மிகக் குறைவான நாடு எது?
(.............................................)

04) கணிதத்தின் தந்தை என அழைக்கப் படுபவர் யார்?
(.............................................)

05) ஹிலாரி கிளின்டனின் சுயசரிதையின் பெயர் என்ன?
(.............................................)


புதிர்ப்போட்டி 1 இற்கான விடைகள் எதிர்வரும் 26.07.2012 வரை அனுப்பலாம். புதிர்ப்போட்டி 2 இற்கான விடைகளை எதிர்வரும் ஆகஸ்ட் 02 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி


**புதிர்ப்போட்டி இல....**
**தினமுரசு**
**இல .373 பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## 2 வெற்றிடங்களை நிரப்புக


(1)





(2)




(3)




(4)




(5)

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 52 | 12 | 28 | 20 |
| B | ? | F | N | J |

## 3

கீழே ஒவ்வொரு வினாவிலும் (A), (B) எனும் தொகைகள் தரப்பட்டுள்ளன இவ்விரு தொகைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து A தொகையே கூடியதாயின் A என்றும், B தொகையே கூடியதாயின் B என்றும் இரு தொகைகளும் சமனாயின் C என்றும் இரு தொகைகளுககும் இடையில் தொடர்பு இல்லாவிட்டால் D எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக

(1) (A) $\left[\frac{1}{6}\right](2)^2$ (B) $(2)\left[\frac{1}{6}\right]^2$ (....................)

(2) (A) $\dfrac{{}^2/_5 - {}^1/_8}{{}^1/_8}$ (B) $\dfrac{6.05}{2.75}$ (....................)

(3) (A) $\dfrac{\sqrt{4}}{\sqrt{25}}$ (B) $\dfrac{3-2}{8}$ (....................)


(4) (A) $\left[\frac{1}{3}\right]\left[{}^6/_7\right]$ (B) 85% (....................)

(5) (A) $\frac{1}{2}+\frac{1}{3}+\frac{2}{5}$ (B) $\frac{1}{3}+\frac{7}{10}+\frac{3}{5}$ (....................)

## 4


**கீழேயுள்ள ஒவ்வொரு உருக்களிலும் நேர்கோடுகள் உள்ளன. எனக் கண்டு பிடித்து கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையின் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் தருக.**

1)




(1) 11 (2) 14
(3) 16 (4) 17
(................)

2)




(1) 10 (2) 9
(3) 8 (4) 11
(................)

3)




(1) 13
(2) 15
(3) 17
(4) 19
(................)

4)



(1) 9 (2) 11
(3) 13 (4) 10
(................)

5)



(1) 10
(2) 08
(3) 11
(4) 14
(................)

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப் பெயர் :- ..........................................

பாடசாலையின் பெயர் :..........................................

தரம் :- :- ..........................................

தொலைபேசி இல.:- ..........................................

முகவரி :- ..........................................

..........................................

### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியில் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் பேடலாம். K.K.S வீதியில் உள்ள தினமுரசு விளம்பர பணிமனையீல் உளள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம்.

# பட்டதாரி பயிலுநர் நியமனத்தால் அரங்கேறும் திருமணங்கள்

(கார்த்தி-சிகரம்)

நிரந்தரவேலை மற்றும் ஓய்வு காலத்தில் கிடைக்கும் ஓய்வூதியம் போன்ற நன்மைகளைப் பெற முடியும் என்பதற்காக பல்கலைக்கழக பட்டப் படிப்பை முடித்த பின்னர் அரசாங்க வேலையொன்று பார்க்கவேண்டும் என்பதே பலரது இலட்சியமாக உள்ளது.

பொதுவாக பல பெற்றோரது எதிர்பார்ப்பும் இதுவாகவே உள்ளது.யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் ,நிரந்தரமாக ஒரு அரசாங்க உத்தியோகம் கிடைத்த பின்னர்தான் பலர் தமது திருமண வாழ்க்கை பற்றி யோசிக்கவே ஆரம்பிக்கின்றனர்.

இந்த நிலையில்,ஜூன் 5ஆம் 6ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பட்டதாரிகள் பயிலுநர்களுக்கான நேர்முகத் தேர்வில் தோற்றியவர்களில் 2011 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டம்பெற்ற 2100 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்த பட்டதாரி பயிலுநர் நியமனங்களை அடுத்து தற்போது பலரது திருமணங்கள் அரகேறத் தொடங்கியுள்ளன.

'அரசாங்க வேலை கிடைச்சாதான் தனக்கு கலியாணம் பேசச் சொன்னவர் என்ட மகன், அவருக்கு இப்ப வேலையும் கிடைச்சுட்டு அடுத்தது அவரின்ட கலியாணம் தான்' என அண்மையில் நியமன்ங்கள் கிடைத்தவர்களில் ஒருவரான பண்டத்தரிப்பைச் சேர்ந்த பட்டதாரி ஒருவரின் தகப்பனார்.

தனது மகனுக்கு தற்போது 33 வயதாகுவதாகக் குறிப்பிட்ட அவர், தன்னுடைய மகனைப் போன்று தனக்குத் தெரிந்த பலர் இந்த நியமனங்களை அடுத்தே திருமணம் செய்யவுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, 'என்ர மகனுக்கும் இப்பதான் ஆர வாரமா பொண்ணு பாக்கிறம்' என்றார் பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்ற மற்றுமொருவரின் தாயார்.


ஏன் அரச வேலை கிடைத்தவுடன் திருமணம் என்ற முடிவில் இருந்தீர்கள்? என தற்போது திருமணப் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்ற ஒருவரிடம் கேட்டபோது,

'நான் கஷ்ரப்பட்டு படிச்சு பட்டம் வாங்கியது, படித்த படிப்புக்கேத்த நல்லதொரு அரசாங்க வேலை பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான். அதுதான் எனக்கும் என்னுடைய குடும்பத்துக்கும் கௌரவம், அதுமட்டுமல்ல, இன்றைய காலகட்டத்தில் திருமணம் முடித்த பின்னர் எங்கட மனைவி, பிள்ளைகளை சந்தோசமா வைத்திருக்க வேண்டும் என்றால் நிரந்தர உத்தியோகம் கட்டாயம் அவசியம். எதிர்காலம் பிரகாசமாக அமையவேண்டும் என்பதற்காகவே நான் அரசாங்க வேலை கிடைத்த பின்னர்தான் திருமணம் என்றதில் உறுதியாக இருந்தேன்' என்றார்.

பட்டதாரி பயிலுநர் நியமனங்களைப் பெற்றவர்களுக்கு முதல் ஆறு மாத காலம் பயிற்சி வழங்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் 10,000 ரூபா ஊதியமாகவும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை நாயகிக்கு திருமஞ்சத்திருவிழா

(கிரு-சிகரம்)



யாழ்ப்பாணம் கல்வியங்காடு திருவருள் மிகு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கு 20 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மஞ்சத்தின் வெள்ளோட்டம் புதன் கிழமை நடைபெற்றது.

கடந்த 09ஆம்திகதி திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இந்த ஆலயத் திருவிழாவின் 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது.

நேற்று 20ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

# விலைப்பட்டியலால் சந்தையில் குழப்பம்

(கிரு-சிகரம்)

பத்திரிகைகளில் வெளியிடப்படும் சந்தை மரக்கறி விலைப் பட்டியலால் திருநெல்வேலிச் சந்தைக்கு வரும் விவசாயிகள், மொத்த கொள்வனவு விற்பனையாளர்கள் மற்றும் சந்தை விற்பனையாளர்களுக்கு இடையில் தொடர்ந்து வாய்த் தகராறு ஏற்பட்டு வருகின்றது.

திருநெல்வேலிச் சந்தையின் மரக்கறி விலை தொடர்பில் பத்திரிகைகளில் வரும் தவறான விலைப் பட்டியலே இந்த வாய்த் தகராறுக்கு பிரதான காரணம் என மரக்கறி வியாபாரி ஒருவர் குறிப்பிட்டார்.யாழ்ப்பாணத்தில் வெளிவரும் சில பத்திரிகைகளில் சந்தையில் விற்கப்படும் மரக்கறி விலை தொடர்பில் சரியான விலைகள் போடப்படுவதில்லை எனக் குறிப்பிட்ட அவர், கடந்த வாரம் திருநெல்வேலிச் சந்தையில் 1 கிலோ கத்தரிக்காயின் விலை 50 தொடக்கம் 60 ரூபாவாகவே காணப்பட்டது. ஆனால், பத்திரிகைகளில் கத்தரிக்காயின் விலை 120 ரூபா என குறிக்கப்பட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு பத்திரிகைகளில் வெளியிடப்படும் தவறான



விலைப்பட்டியலைப் பார்க்கும் விவசாயிகள் மற்றும் மொத்தக் கொள்வனவாளர்கள், திருநெல்வேலிச் சந்தையில் அதிக விலைக்கு கொடுக்கலாம் என நம்பி வருவதாகவும், பின்னர் உண்மை விலை நிலவரத்தை அறிந்த பின்னர் 'பத்திரிகையில் விலை அதிகமாக இருக்கு, ஏன் இப்படி குறைச்சு கொள்வனவு செய்யிறீங்க' என தங்களுடன் வாய்த் தகராறில் ஈடுபடுவதாகவும் இந்த விபாபாரி குறிப்பிட்டார்.


இதுமட்டுமன்றி, பத்திரிகையில் காணப்படும் விலைகளுக்கும் சந்தை விற்பனை விலைக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டால் வியாபாரிகளுக்கும், நுகர்வோருக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்படுகிறது என சந்தைக்கு மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய வந்த நபர் ஒருவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான தவறான செய்திகளால் ஏற்படும் குழப்பங்கள் மற்றும் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு இனி மேலாவது பத்திரிகைகளில் மிகச் சரியான தகவல்களை வெளியிட வேண்டும் என்றார் மரக்கறி விற்பனையில் ஈடுபட்டிருந்த மற்றுமொரு வியாபாரி.

இதேவேளை, திருநெல்வேலிச் சந்தைக்கு தம்புள்ள, நுவரேலியா போன்ற மாவட்டங்களிலிருந்தும் அதிகளவான மரக்கறிகள் வருவதனால் தற்போது மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# மெய்தான் பாருங்கோ...

## மன உளைச்சல்கள்



மனிசனாப் பிறக்கிற எவனும் வாழ்க்கையில பிரச்சினையள், கரைச்சலுகளைச் சந்திக்காமல் செத்துப் போனதாக இல்லைப்பாருங்கோ. ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கையில ஏதோவொரு பிரச்சினையள் வரும்; வந்து... போய்க்கொண்டிருக்கும். சந்தப்ப சூழ்நிலையளால ஏற்படுகிற பிரச்சினையள் வேறை. அடுத்தவனை சங்கடப்படுத்தி, மன வேதனைப்படுத்தி அவன்ர மனம் பதகளிப்படுகிறதைப் பாத்துப் பிரவரப் படுகிற ஆட்களால ஏற்படுகிற பிரச்சினையள் வேறை கண்டியளே!

இப்பிடி அடுத்த மனிசரால ஏற்படுகிற பிரச்சினையளால பாதிக்கப் படுகின்ற மனம், படுகிற உளைச்சல் இருக்குது பாருங்கோ, அதை வாத்தையளால சொல்லவுமேலாது; எழுதவு மேலாது.

இப்பரண்டு நாளா இந்தப்பக்கம் நான் வந்து உங்களோடை பறையாமல் போனதுக்கு எனக்குள்ள கிடந்து குமைஞ்சு கொண்டிருந்த பல மன உளைச்சல்தான் காரணம் பாருங்கோ!

வன்னியை விட்டு வேலைவிராய்தேடி இஞ்சாலிப் பக்கம் வந்து நிண்டால், என்ர எண்ணம் முழுக்க வீட்டு நினைப்புத்தான் வன்னிப் போருக்குள்ள எல்லாத்தையும் தின்னக்குடுத்திட்டு வெறுங்கையோடை ஓடிப்போய், பிறகு மீள்குடியேற்றமெண்டு வந்து, உந்த நிறுவனங்கள் குடுத்த சாமான் சக்கட்டுகளை எறும்பு சேகரிச்சமாதிரி... ஒவ்வொண்டாய்ச் சேகரிச்சு தலை நிமிரவெண்டு வெளிக்கிட அதில அரைவாசி களவு போட்டுது பாருங்கோ!

பனையால விழுந்தவனை மாடேறி மிதிச்சமாதிரி... எங்களைப்போல ஆட்களுக்கு 'அடிக்குமேல அடி' விழுந்து கொண்டுதான் இருக்குது. ஆனாலும் பாருங்கோ நாங்கள் விழுந்தாலும் எழும்பிக்கொண்டுதான் இருப்பம்... எண்டது இஞ்சை பலபேருக்கு தெரியாத சங்கதி.

சரி அதை விடுவம்! நான் இப்ப விசயத்துக்கு வாறன்!

மூண்டு வருசத்துக்கு முன்னம் முள்ளிவாய்க்காலோடை 'எல்லாம் முடிஞ்சுது' எண்டு எப்பன் நிம்மதியா மூச்சு விடலாமெண்டால் எங்கட அவலத்தை, அந்தரிப்புகளை வைச்சு இப்பவும்; இனியும் சுயலாப அரசியல் நடத்தலாம் எண்டு நினைக்கிற ஆட்களை நினைக்க மனஉளைச்சலாத்தான் கிடக்குது கண்டியளே!

அட இதுகளை விடுவம்! நாங்கள் எல்லாம் ஒரே இனம்...! ஒரேமொழி பேசுற ஆட்கள்... எண்டு காட்டிக் கொள்ளுறவை போருக்கை அம்பிட்ட வன்ர ஊனங்களைப் பாத்து இப்ப அருக்குளித்து ஒதுக்குறதை நினைச்சாலே மன உளைச்சலாத்தான் கிடக்குது.

இஞ்சை யாழ்ப்பாணப் பக்கம் தொழில் துறையெண்டு வந்து நிண்டால், வேலை செய்யிற இடங்களிலும் வில்லண்டமாகத்தலையில ஏறிக்குந்துகிற பிரச்சினையளால ஒரே மன உளைச்சலாகத்தான் கிடக்குது.

இதை விட என்னைப்பிடிக்காத ஆட்கள் என்னைக் கண்டவுடன் தங்களுக்குப் பக்கத்தில இருக்கிற பொடி பொட்டையளை இழுத்துக்கொண்டு பாயுறதை நினைச்சா ஒரு பக்கம் சிரிப்பாகவும், இன்னொருபக்கம் மன உழைச்சலாகவும் தான் கிடக்குது. இப்பிடியான ஆட்களை நான் பெரிசாப் பரவாய் பண்ணுறேல்லையெண்டாலும், இதுவொரு அநாவசியமான பிரச்சினையெண்டது விளங்குதுதானே உங்களுக்கு.

இதைவிட இன்னுமொண்டு இருக்குது பாருங்கோ!

தனிநாட்டுக்கான போராட்டம்... எண்டு வெளிக்கிட்டு, அந்தத்தனி நாட்டுக்கு எல்லை போட வக்கில்லாததுகள் சில இப்ப வன்னியிலதங்கட வேலியில அங்குலம் அங்குலமாக கிளுவங்கதியாலுகளைத்தள்ளி அடுத்தவன்ர காணியை அபகரிக்கிற வேலையளும் நடக்குது. என்ர வீட்டு எல்லை வேலியிலும் உதுதான் இப்ப பிரச்சினை, இப்படி ஏகப்பட்ட பிரச்சினைகளை மனசுக்குள்ள அமுக்கிக் கொண்டு... மன உளைச்சல்களைச் சுமந்து கொண்டு, ஒரு மனிசன் என்னெண்டு இருந்த இடத்தை விட்டு இன்னொரு இடத்தில நிம்மதியாத் தொழில் செய்ய ஏலும்?

வேலை செய்யப்போன இடத்தில ஒரு முதலாளி என்ர பிரச்சினையளைக்கேட்டுப்போட்டு,"இப்பிடியான மன உளைச்சல்களோடை என்னண்டுதான் சீவிக்கிறீரோ..." எண்டு கேட்டதே எனக்குப்பெரிய ஆறுதலாக்கிடந்துது பாருங்கோ!.

- சின்னக்குட்டி சின்னச்சாமி-

# யாழ்ப்பாணம் வரும் மக்கள் வவுனியாவில் காத்திருக்கும் அவலம்

(கிளிநொச்சி)

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வருவதற்குரிய உள்ளூர்சேவையில் பேருந்துகள் ஈடுபடாமையால் மேற்படி இடங்களிற்கு பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வவுனியாவிலிருந்து கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிற்கு செல்வதற்கு தாம் கொழும்பிலிருந்து வவுனியாவந்து மேற்படி இடங்களுக்கு செல்லும் பேருந்துகளுக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டியுள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் இவ்வாறு நிற்பதால் குடி போதையில் வருவோர் தகாத வார்த்தைகளை பயன்படுத்துவதுடன் சமூக சிரழிவுக்களுக்கு வழி சமைப்பதாக உள்ளது எனவும் தெரிவிக்கும் உள்ளூர் பயணிகள் குறிப்பிட்ட நேரத்தில் வவுனியாவிலிருந்து மேற்படி இடங்களுக்கு பேருந்து சேவை இடம்பெற்றால் சிரமமின்றி பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து உள்ளூர் பேருந்து சேவையை ஏற்படுத்தி தருமாறு பயணிகள் கோரிக்கைவிடுக்கின்றனர். (77)

# வீதி திறப்பால் மக்கள் நன்மை

(வரணி)

வரணி அம்மா கடைவீதி பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளதால் போக்குவரத்தை மேற்கொள்வோர் தாம் பெரும் நன்மை அடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி 12 வருடங்களாக மக்கள் பாவனைக்கு முற்றாகத் தடை செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டது. இதனால் இப்பிரதேச மக்கள் போக்குவரத்துக்காக மாற்றுப்பாதையை பயன்படுத்தி வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மாரிகாலத்தில் பெரும் சிரமத்தின் மத்தியில் சேறும், சகதியுமாக இருக்கும் மாற்றுப்பாதையால் பயணித்ததாகவும் தற்போது இப்பாதை திறக்கப்பட்டமையால் வாகனங்களிலும், நடையாகவும் சிரமமின்றி பயணம் செய்யக் கூடியதாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (150)

# வருடாந்த மஹோற்சவம்

(தும்பளை)

புலோலி வடக்கு, மருதடி குருமணல் அருள்மிகு கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

தினமும் பகல் உற்சவத்தில் காலை 8.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி 9.30 மணிக்கு ஸ்தம்ப பூஜையும் 10.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் நடைபெற்று 11.30 மணிக்கு பகல் உற்சவங்கள் நிறைவுபெறும்.

மாலை உற்சவங்களாக 4.00 மணிக்கு விஷேட பூஜைகளும், 4.30 மணிக்கு ஸ்தம்ப பூஜையும், 5.15 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் நடைபெற்று 7.30 மணிக்கு மாலைததிருவிழா நிறைவுபெறும்.

31 ஆம் திகதி செவ்வாய் கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் புதன் கிழமை காலை 9.00 மணிக்கு இரதோற்சவமும் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தோறசவமும் நடைபெறவுள்ளது. (62)

# மாவட்ட மட்ட பாட்டுப்போட்டி

(கட்டுவன்)

மாவட்டமட்டத் திலான பாட்டுப்போட்டியானது இன்று 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இப்போட்டியானது ஏற்கனவே பிரதேசமட்டத் தில் இடம்பெற்ற போட்டியில் வெற்றியீட்டிய போட்டியாளர் களுக்கானதாகும். வெற்றியீட் டிய அனைவரையும் தவறாது இப்போட்டியில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (22)

# காரைநகரில் முக்கிய வீதிகள் புனரமைப்பு



(காரைநகர்)

காரைநகர் பழைய கண்டி சிவன் கோவில் வீதியானது புதிதாக செப்பனிடப்படுவதற்காக கமநெகும வேலைத் திட்டத்தின்கீழ் ரூபாய் 13 மில்லியன் செலவிடப்பட்டு வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

காரைநகர் மக்களின் வேண்டுகோளின் பேரில் முன்னெடுக்கப்படும் இவ்வீதி புனரமைப்பு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி காரைநகர் அமைப்பாளரும் காரைநகர் பிரதேச சபை எதிர்கட்சி தலைவருமான வி.கண்ணன் (ரஜனி) கருத்து தெரிவிக்கையில் காரைநகர் பிரதேசத்தின் பிரபல்யமான கசூரினா கடற்கரைக்கு சுற்றுலா வரும் பயணிகளுக்கும் காரை நகர் ஈழத்து சிதம்பரம் சிவன் கோயிலுக்கு வழிபாட்டுக்கு செல்லும் அடியார்களுக்கும் இவ்வீதி புனரமைப்பானது மிகவும் பயனுள்ளதாக அமையும் எனத்தெரிவித்துள்ளார்.

மேலும் சீரற்ற வீதி காரணமாக அடிக்கடி ஏற்படும் வாகன விபத்துகள் வீதி புனரமைப்புடன் தடுக்கப்படும் என்பதுடன் இவ்வீதி செப்பனிட்ட பிறகு ஈழத்து சிதம்பரம் கோயிலுக்கு வரும் பக்தர்கள் இவ்வீதியைப் பயன்படுத்தலாம் என்பது மற்றுமோர் விடயமாகும். நெல்சிப் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு சுமார் 5 உள்ளூர் வீதிகள் காரைநகரில் செப்பனிடப்பட்டு முடிவுற்றுள்ளன. அத்துடன் மருதபுரம் வீதி தன்னை சுந்தரமூர்த்தி வீதி தோப்புக்காடு வீதி ஆகியவற்றின் புனரமைப்பு பணிகள் இந்த மாதம் அளவில் ஆரம்பிக்கப்பட்ட உள்ளது என்றார்.

பிரதேசசபை செயலாளர் தலைமையில் வீதி புனரமைப்பு திட்டத்தின் ஆரம்ப நிகழ்வின்போது அதில் கலந்து கொண்ட கண்ணன் அவர்கள் வீதிக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை தரம் அளவு மற்றும் மதிப்பீடு என்பன தொடர்பாக கண்டறிந்ததோடு திட்ட ஒப்பந்தக்காரருடன் வீதி அகலமாக்குதல் மற்றும் கு[illegible] பாடுகள் பற்றியும் நேரில் கலந்தாலோசித்தமை குறிப்பிடத்தக்கது.

# வலிகாமம் கல்வி வலய ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாண வர்களுக்கிடையே ஆங்கில மொழித்தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வலயக் கல்விப் பணிமனையால் அறிவிக்கப் பட்டுள்ளது.

மாணவர்களின் ஆங்கில மொழிவிருத்தியை மேம்படுத்தும் பொருட்டு பதினாறு வகைப் போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. இதில் முதன் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**வாசிப்பு**

தரம் 3

கோ.பிரியங்கி (யாழ்ப்பாணக் கல்லூரி), வி.வெனிதா (மகாஜனாக் கல்லூரி), டி.நிமலன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

தரம் - 4

ச.வர்ணதீபா (யாழ்ப்பாணக் கல்லூரி), சு.நிலக்ஷிகா (ஏழாலை மேற்கு சைவ சண்மார்க்க வித்தியாலயம்), சி.தபசாகரி (வட்டு.இந்துக் கல்லூரி), அ.மரில்டா (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

தரம் - 5

லோ.சிறிகீரன் (யாழ்ப்பாணக் கல்லூரி), நி.தர்மிகா (உடுவில் மகளிர் கல்லூரி), இ.கீர்த்தனா (யாழ்ப்பாணக் கல்லூரி), பா.காருண்ஜா (உடுவில் மகளிர் கல்லூரி)

**செய்தி வாசிப்பு**

தரம் - 12

இ.காயத்திரி (யாழ்ப்பாணக் கல்லூரி), சே.ஜானுசா (இளவாலை திருக்குடும்ப கன்னியர் மகா வித்தியாலயம்), த.ஜதுசா (வட்டு இந்துக் கல்லூரி), இ.மேரிறோசானா (இராமநாதன் கல்லூரி)

தரம் - 13

பா.ஜஸ்ரிகா (இராமநாதன் கல்லூரி), ஞா.மயூரி (யாழ்ப்பாணக் கல்லூரி), ந.சரண்ஜா (யாழ்ப்பாணக் கல்லூரி

**அபிநயப் பாடல்**

தரம் - 1,2

1 ஆம் இடம் உடுவில் மகளிர் கல்லூரி 2 ஆம் இடம் யாழ்ப்பாணக்கல்லூரி, 3 ஆம் இடம் மகாஜனாக் கல்லூரி).

தரம் - 3,4,5

1 ஆம் இடம் யாழ்ப்பாணக் கல்லூரி, 2 ஆம் இடம் உடுவில் மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மகா வித்தியாலயம்.

(தொடரும்.......)

# றமழானை வரவேற்போம்



தூய்மைக்குரிய மாதமே 'றமழானே' உன் அருட் கொடைகளை அள்ளி வழங்கி சுவர்க்க வாயில்களை திறந்து நரக வாயில்களை மூடிவிட வருகின்றாயே உன்னை வருக வருகவென்று வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அல்லாஹ் தாவூலாவினால் இந்த புனித மாதம் முஸ்லிம்களுக்கென்றே வழங்கப்பட்ட பெறுமதி மிக்க மாதமாகும். இந்த வெகுமதியின் மதிப்புணர்ந்து அன்றாட எம் அமல்களை ஆர்வமுடன் அமுல் நடத்தி வழிபட்டு எம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

மேலும் இம்மாதம் பொறுமையின் மாதம் என்பதனால் அண்டை அயலார் அனைவருடனும் பொறுமையுடன் கலந்துறவாடி அவர்களின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டு பலனடைய வேண்டும்.

இன்னும் இம்மாதத்திலேயே உணவு (ரிஸக்) விஸ்தீரணமாக்கப்படுவதால், நாம் ஒருவரை ஒருவர் நோன்பு திறக்க வைத்து பாவங்களை ஒழித்து பயன்பெறுவோம்.

அல்லாஹ்தவூலா இம்மாதத்தில் நோன்பு வைப்பதை பர்ளாகவும், அதன் இரவுகளில் நின்று வணங்குவதை (தராவீஹ்) சுன்னத்தாகவும் ஆக்கியுள்ளான்.




எனவே "எல்லா இபாதத்துக்களுக்கும் தலைவாசல் நோன்பு" என்பதால் அதன் வழி ஒழுகி எம் இதய ஒளியை மிளிரச் செய்வோமாக.

மௌலவி
ஏ.எம்.ஏ.அஸீஸ் (ஹாஸிமி)

Grade - 13

இரசாயனவியல்

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

# கல்வி முரசு

02 | T | II

நேரம் : 2 மணி

ஆசிரியர் :
S.T.ஜனார்த்தனன்
(Bsc.)

1) +6 ஒட்சியேற்ற எண்களை எடுக்கக்கூடிய மூலகங்கள் எவையாகும்?
1) 9, 17, 24   2) 8, 9, 16
3) 17, 26, 28   4) 16, 17, 24   5) 15, 16, 17

2) நான்முகி வடிவத்தை எடுக்கக்கூடிய கூறுகளின் VSEPR குறியீடுகள் யாதாகும்?
1) $AX_4E_0, AX_4E_2$   2) $AX_4E_1, AX_4E_2$
3) $AX_4E_0, AX_4E_1$   4) $AX_4E_0, AX_3E_1$   5) $AX_4E_2, AX_3E_2$

3) ஒரு குடுவையில் அடைக்கப்பட்ட $NO_2$ வாயுவின் ஒரு பகுதி $N_2O_4$ வாயுவாக மாறிச் சமநிலையிலிருந்தது. சம நிலையில் 40% $NO_2(g)$ ஆனது $N_2O_4$ (g) ஆக மாற்றப்படும்போது தொகுதியில் $N_2O_4$ இன் மூல்ப்பின்னம் யாதாகும்?
1) 0.40   2) 0.25   3) 0.20   4) 0.15   5) 0.10

4) கீழ்த்தரப்படும் சேர்வைகளின் கொதிநிலை ஏறுவரிசை யாதாகும்?
1) $CH_3COOH < CO(NH_2)_2 < HCOOCH_3$
2) $HCOOCH_3$ < CO(NH2)2 < CH3COOH
3) $HCOOCH_3 < CH_3\ COOH < CO(NH_2)_2$
4) $CH_3COOH < HCOOCH_3 < CO(NH_2)_2$
5) $CO(NH_2)_2 < HCOOCH_3 < CH_3\ COOH$

5) ȧg $Mg(NO_3)_2$ திண்மத்தை வெப்பமேற்றி ஆறவிட b g Mg பெறப்பட்டது. உருவாகிய $O_2$ மூல் எண்ணிக்கை mol இல் யாதாகும்?
1) $\frac{a}{296}$   2) $\frac{a}{148}$   3) $\frac{a-b}{296}$   4) $\frac{a-b}{148}$   5) $\frac{b}{80}$

6) ஐதான $H_2SO_4$ நீர்க்கரைசலுடன் கீழ்த்தரப்படும் எக்கரைசலுடன் அவதானிக்கக் தக்க மாற்றத்தினைத் தராது?
1) $KNO_2$   2) $K_2SO_3$   3) $Na_2S$
4) $NaNO_3$   5) $Na_2\ S_2O_3$

7) ஐதான HCI உடன் அவதானிக்கத் தக்க மாற்றத்தினைத் தராத நீர்க்கரைசல் எதுவாகும்?
1) $K_2CrO_4(aq)$   2) $K_2CO_3(aq)$
3) $AgNO_3(aq)$   4) $K_2SO_4(aq)$
5) $Pb(NO_3)_2$

8) $300^0C$ யில் மூடிய பாத்திரமொன்றில் வாயுநிலையிலுள்ள AB ஆனது P அலகு அமுக்கத்தையுடையது. அது பகுதியாகப் பிரிந்து $A_2, B_2$ வாயுக்களாகப் பிரிகையடைந்தது. அப்போது 40% $A_2$ பிரிகையடைந்து சமநிலையில் காணப்படு கிறது. தொகுதியின் கனவளவு அரைவாசியாகக் குறைக்கப்படும்போது தொகுதியின் அமுக்கம் அதே அலகில் யாதாகும்?
1) 4P   2) 2P   3) P   4) $^P/_2$   5) $^P/_4$

9) கீழ்த் தரப்படும் சேர்வைகளில் நீரில் கரைதிறன் குறைந்த சேர்வை யாதாகும்?
1) $CH_3CH_2CI$   2) $CH_3CHO$
3) $(CH_3)_2CO$   4) $CH_3COOH$
5) $CH_3CH_2OH$

10) $Na_2{}^{16}O_2$ திண்மத்தை $D^{18}OH$ நீரில் கரைக்கும்போது பெறமுடியாத விளைவு யாதாகும்?
1) $Na^{16}OH$   2) $Na^{18}OH$
3) $Na^{16}OD$   4) $^{16}O_2$   5) $^{18}O_2$

11) 1.92 g $C_9H_{20}$ இனை ஒட்சிசனில் தாளிக்கப்பட்ட 1.8 g நீராவி பெறப்பட்டது. தாக்கம் புரிந்த ஒட்சிசனின் திணிவு கிராமில் யாதாகும்?
1) 6.72   2) 4.48   3) 4.02   4) 3.86   5) 3.24


12) கீழ்த்தரப்படும் இலத்திரன் நிலையமைப்புக்களில் தவறானது எதுவாகும்?
1) N:- (He) $2s^22p^3$   2) S:- (Ne) $3s^23p^4$
3) Cs:- (Xe)$6s^1$   4) Bi:- (Xe) $5d^{10}6s^26p^3$
5) Se:- (Ar) $4d^{10}4s^24p^4$

13) கீழ்த்தரப்படும் எவ் அயன் அல்லது மூலக்கூறில் அணுக்கள் யாவும் ஒரே நேர்கோட்டில் அமையாது?
1) $C_2H_2$   2) $H_2P_2$   3) $CO_2$   4) $CS_2$   5) $ICI_2$

15) கீழ்த்தரப்படும் எத்தாக்கத்தின்போது NO வாயு உருவாகமாட்டாது?
1) Cu+50% $HNO_3$ → 2) $KNO_2$+ ஐதான HCl → 3) C செறி சூடான $HNO_3$ → 4) $FeSO_4(aq) + KNO_3\ (aq)$ + சிறிதளவு கொதி $H_2SO_4$ →
5) $NH_3+O_2 \rightarrow \frac{Pt}{850^0X}$

16) கீழ்த்தரப்படும் எச் சேர்வையுடன் NaOH தாக்கமுறாது.
1) $CH_3CH_2COOH$   2) $CH_3CH_2OH$
3) $CH_3NHCH_3$   4) $CH_3CH_2CL$
5) $CH_3CH=CH_2$

17) $C^{18}O_2 + Na\ {}^{16}{}_2O$ → சோடியம் காபனேற்று $\underrightarrow{HCl}$ தரப்பட்ட தாக்கத் தொடர்ச்சியின் இறுதியில் பெறமுடியாத விளைவு யாதாகும்?
1) $C^{18}O_2$   2) $C^{16}O_2$   3) $C^{16}O^{18}O$
4) NaCI   5) $H_2O$

18)  d - $CH_2$- CH= CH - $CH_2$ - C ≡ CR (b, c, b)


a,b,c,d என்ற C-C பிணைப்புக்களின் பிணைப்பு வலிமை ஏறுவரிசை ஒழுங்கின்படி சரியான தொடர்பைத் தருக.
1) a,b,c,d   2) a,b,d,c   3) c,d,b,a
4) d,c,b,a   5) c,b,a,d

19) கூட்டம் வழியே மேலிருந்து கீழாக மூலகங்களின் எவ்வியல்பு தவறாகத் தரப்பட்டுள்ளது.
1) முதலாம் அயனாக்கற் சக்தியின் பெறுமானங்கள் குறைவடைந்து செல்லும்
2) அணுவாரை அதிகரித்துச் செல்லும்.
3) உலோக இயல்பு அதிகரித்துச் செல்லும்
4) உருகுநிலை குறைவடைந்து செல்லும்
5) மின்னேரியல்பு அதிகரித்துச் செல்லும்

20) $2Cl_2(g) + 70_2(g) \rightleftharpoons 2Cl_2O_7(g)$ ∇ H<0 எனும் மீளும் தன்மையுடைய சமநிலையிலுள்ள தாக்கத்தின் சமநிலைத் தாக்கத்தை வலது புறமாக நகர்த்த எந்த நடவடிக்கை பயன்படுத்தப்படவேண்டும்?
1) தொகுதியில் வெப்பநிலையை அதிகரிக்க வேண்டும்.
2) தொகுதியின் கனவளவை மாறாது வைத்துக்கொண்டு Ne வாயுவைச் செலுத்துதல்
3) பொருத்தமான ஊக்கியைப் பயன்படுத்தல்
4) தொகுதியின் அமுக்கத்தை அதிகரித்துக் கொண்டு ழ2 வாயுவை தொகுதியிலிருந்து அகற்றுதல்.
5) தொகுதிக்குள் $CL_2$ வாயுவில் அதனது சமதானியாகவுள்ள ஊடு2 வாயுவைச் செலுத்துதல்.

21. இரு தாக்கங்களைக் கருதுக.
$H_2O(l) \rightarrow H_2O(g)$   $H_2O(l) \rightarrow H_2O(g) + {}^1/_2O_2(g)$
மேலே தரப்பட்ட தாக்கங்களை நிகழ்த்துவதற்க எந்த சக்தி வளத்தைப் பயன்படுத்துதல் சிறந்ததாகும்?

| தாக்கம் I | தாக்கம் II |
|---|---|
| 1) வெப்பசக்தி | வெப்பசக்தி |
| 2) மின்சக்தி | மின் சக்தி |
| 3) மின்சக்தி | வெப்பசக்தி |
| 4) வெப்பசக்தி | மின்சக்தி |
| 5) வெப்பசக்தியடன் மின்சக்தி | வெப்பசக்தி |

22) பின்வரும் ஒழுங்குகளில் எது A,B,C,D சேர்வைகளின் அமிலவலு அதிகரிக்கும் வரிசையைச் சரியாகத் தருகிறது?
A)  - $NH_3CI$   B)  - $NH_2$   C) $NH_3$   D) $CH_3\ CH_2OH$

1) C<B<D<SA   2) C,D,A,B
3) C,B,D,A   4) B,A,C,D
5) A,B,C,D


23. ஐதரசன் காலல் நிறமாலையில் லைமன் தொடர், பாமர் தொடர், பசன் தொர்டர் ஆகியவற்றில் அதியுயர் சக்திக்காலுக்குரிய கோடுகளின் அலைநீளங்கள் முறையே $\lambda_1, \lambda_2, \lambda_3$ ஆகும். இவற்றின் இரண்டாவது உயர்சக்திக்குரிய அலை நீளங்கள் முறையே $\lambda_1', \lambda_2', \lambda_3'$ ஆகும். A,B,C எனும் தொடர்புகள் தரப்படுகின்றன.

$A = \lambda_1, < \lambda_2, < \lambda_3$   $B = \lambda_2, < \lambda_1, < \lambda_3 - \lambda_2$
$C = \lambda_1', - \lambda_1, < \lambda_3 - \lambda_2$

கீழ்த்தரப்படம் விடைகளில் சரியானது எதுவாகும்?

1) A மட்டும் சரி  2) B மட்டும் சரி  3) C மட்டும் சரி
4) A யும் C யும் மட்டும் சரி  5) A,B,C சரியானவை

24)




என்ற சேர்வை Br2 நீருடன் தாக்கம் புரிய விடப்படும் போது கீழ்த்தரப்படும் எவ்விடங்களில் புரோமினேற்றம் நிகழலாம்?

1) b,d  2) a  3) c  4) a,b  5) a,d

25) $N_3^-$ பற்றிய கட்டமைப்புக்கள் சில தரப்படுகின்றன. A) $\overset{-}{N}=\overset{+}{N}=\overset{-}{N}$

B) $\overset{2-}{N}-\overset{+}{N}\equiv N$  C) $N = N = \underset{-}{N}$ இவற்றில் சரியான கட்டமைப்புக்கள் எது? எவையாகும்?

1) A மட்டும் சரி  2) B மட்டும் சரி  3) C மட்டும் சரி
4) A யும் C யும் மட்டும் சரி  5) A,B,C சரியானவை

26) $No_2$ ஆனது எதனை ஒட்சியேற்றமாட்டாது.

1) KI(aq)  2) $CO_2$  3) $H_2S$  4) NO  5) $CO_2$

வினா 27, 28 இற்கு கீழ்த்தரப்படம் தரவுகளைப் பயன்படுத்துக

HA என்பது ஓர் ஒரு மூலமென்னமிலமாகும். இதனால் நீர்க்கரைசல் $25^0C$ யில் $1 X 10^{-5}$ $moldm^{-3}$ கூட்டற்பிரிவு மாறிலியைக் கொண்டுள்ளது. HA யின் 0.01 mol $dm^{-3}$ நீர்க்கரைசல் P யின் $10cm^3$ கீழே தரப்பட்ட சோதனைப் பொருட்களுடன் தனித்தனியாகக் கலப்பதன் மூலம் B,C,D எனும் கரைசல்கள் தயாரிக்கப்படுகின்றன.

கரைசல் P + $10cm^3$ தூய நீர் = கரைசல் B
கரைசல் P + 10 $cm^3$, 0.01 $molm^{-3}$ HCl (aq) = கரைசல் C
கரைசல் P + 10 $cm^3$, 0.01 $molm^{-3}$ HCl (aq) = கரைசல் D

விடைத் தெரிவுகள் பின்வருமாறு:

1) B மட்டும் சரி  2) D மட்டும் சரி  3) B யிலும் D யிலும்
4) C யிலும் D யிலும்  5) B,C,D சரியானவை

27) எக்கரைசல் / கரைசல்களில் P யிலுள்ள $A^-$ அயன்களின் மூல் எண்ணிக்கையிலும் கூடிய $A^-$ மூல் எண்ணிக்கை காணப்படும்?

28) எக் கரைசல்/ கரைசல்களில் P யிலுள்ள $A^-$ அயன் செறிவிலும் கூடிய அயன் செறிவில் $A^-$ காணப்படும்.

29) சில வெப்ப இரசாயனத் தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| பிணைப்பு | $C\overset{\pi}{-}C$ | $C\overset{\sigma}{-}C$ | C-H |
|---|---|---|---|
| பிணைப்புச்சக்தி $kJmol^{-1}$ இல் | a | b | c |

| மூலகம் | C (g) | H (g) |
|---|---|---|
| $\Delta H_f$ ($kJmol^{-1}$) | x | y |

CH ≡ C - CH = $CH_2$(g) இன் தோன்றல் வெப்ப உள்ளுறை மாற்றம் $kJmol^{-1}$ இல் யாதாகும்?

1) 4(x+y-c) -3 (a+b)  2) 4(x+y) - 3 (a+b+c)
3) 3(a+b) -4 (c-x-y)  4) 3(a+b+c) -4 (x-y)
5) x +y+a+b+c

30) 1mol $KMno_4$(ag) ஆனது 1mol $MnSO_4$ ஆக அமில ஊடகத்தில் மாற்றப்படுவதற்கு தேவையான மின்கணியம் பரடேயில் எவ்வளவு ஆகும்?

1)1  2)2  3)3  4)4  5)5

31. பல்பகுயங்கள் பற்றிய கூற்றுக்களில் உண்மையானது எதுவாகும்?


1) நைலோன் 6,6 தயாரிப்பதற்கு எந்தவொரு டைஅமீனையும் ஒரு டைஒயிக்கமிலத்தையும் பயன்படுத்தலாம்.
2) நைலோன் பல்பகுதிகச் சங்கிலிகளுக்கிடையில் H- பிணைப்பு காணப்படுவதில்லை.
3) நைலோன் ஒரு வெப்பமிறுக்கும் பல்பகுதியங்களாகும்.
4) நைலோன், பேக்லைட் போன்றவை ஒடுக்கற் பல்பகுதியங்களாகும்.
5) நைலோன் ஒரு புரதமாகும்.

32) $CH_3CHBrCHICH_3$ இலிருந்து

$$CH_3 - \underset{CH_3}{\overset{CH_3}{\underset{|}{\overset{|}{C}}}} - CH_2CH_2CH_3$$

இனைத் தொகுப்பதற்கு சிறந்த ஆரம்பப்படி யாதாகும்?

1) Mg தூள், உலர் ஈதர் ஊடகம்
2) Zn தூள், வெப்பமேற்றுதல்
3) $CH_3MgBr$ இனைச்சேர்ந்தல்
4) alc/KOH சேர்ந்தது வெப்பமேற்றுதல்
4) HCHO சேர்த்தல்.

33) $CH_3$ -  - $NH_2$ ஆனது $0\text{-}5^0C$ யில் $HNO_2$ உடன் தொழிற்படவிட்டுப் பெறப்பட்ட கரைசல் $0\text{-}5^0$ C இல் NaOH நீர்க்கரைசலுடன் β - நைப்தோல் தொழிற்பட விட்டபோது பெறப்படும் சேதனச் சேர்வையில் ஒரு தளத்தில் காணப்படக்கூடிய காபன்களின் எண்ணிக்கை.

1) 6  2) 7  3) 12  4) 13  5)19

34) தங்க ஆபரணங்களை மினுமினுப்பாக்கச் சிறந்த வழியாகக் கருதக் கூடியது.

1) தங்க ஆபரணத்தை அரச நீரில் இட்டு உரோஞ்சி எடுத்தல்.
2) தங்க ஆபரணத்தை செறி $HNO_3$ இல் இட்டு உரோஞ்சி எடுத்தல்.
3) தங்க ஆபரணத்தை செறி $H_2SO_4$ இல் இட்டு உரோஞ்சி எடுத்தல்.
4) தங்க ஆபரணத்தை செறி $CuSO_4$ நீர்க்கரைசல் சேர்த்து உரோஞ்சி எடுத்தல்.
5) தங்க ஆபரணத்தை மேலால் $CI_2$ வாயுச் செலுத்தி உரோஞ்சி எடுத்தல்.

35) $NiSO_4$ நீர்க்கரைசலையும் $FeSO_4$ நீர்க்கரைசலையும் வேறு பிரித்தறிவதற்கு சிறந்த முறையாதாகும்?

1) NaOH நீர்க்கரைசல் சேர்த்தல்.
2) சிறிதளவு $NH_4OH$ கரைசல் சேர்த்தல்
3) $CI_2$ வாயுவைச் செலுத்தல்.
4) $(NH_4)_2$ கரைசல் சேர்த்தல்.
5) $Ba(NO_3)_2$ கரைசல் சேர்த்தல்.

36. எக்கரைசலுக்குள் $H_2S$ வாயு செலுத்தும்போது வெண்மஞ்சள் வீழ்பீழ்வு பெறப்படுவது அவதானிக்கக்கூடியதாக இருக்கும்?

1) $NaAsO_3$ அமில நீர்க்கரைசல் சேர்த்து வெப்பமேற்றுதல்.
2) $Cd(NO_3)_2$ நீர்க்கரைசல்
3) $Na_3AsO_4$ அமில நீர்க்கரைசல்
4) $K_2Cr_2O_7$ அமில நீர்க்கரைசலினுள்
5) $BaCl_2$ நீர்க்கரைசலினுள்

(தொடரும்....)

## இணைந்த கணிதம்


(சென்றவாரத் தொடர்ச்சி.....)

16) a. ஒவ்வொன்றும் w நிறையும் 2a நீளமும் கொண்ட AB,AC எனும் சீரான இரண்டு கோல்கள் A இல் சுயாதீனமாக மூடப்பட்டு முனைகள் B,C என்பன ஒப்பமான கிடை மேசையொன்றின் மீது அமையுமாறு நிலைக்குத்துத் தளமொன்றில் வைக்கப்பட்டுள்ளது. புள்ளி C ஐயும் AB ன் நடுப்புள்ளியையும் இணைக்கும் இலேசான நீளா இழை யொன்றின் மூலம் சமநிலை பேணப்படுகிறது. அப்போது ஒவ்வொரு கோலும் கிடையுடன் α (α π/2) கோணத்தை ஆக்குகிறது. இழையின் இழுவை

T எனின்

$$T= \frac{w}{4}\sqrt{1 + 9 \cot^2 \alpha}$$


எனக் காட்டுக.




b) AB, BC, CD, AD, BD இலேசான கோல்கள் BC,AD கிடையானவை. A இல் நிலையான ஒப்பமாக மூடப்பட்டுள்ளது.

A = C = $90^0$ தகைப்பு வரைபடம் வரைந்து கோலில் தகைப்புக்களைக் கண்டு அவற்றை இழுவையா? உதைப்பா? என இனங்காண்க.

17) H உயரமுடைய சீரான திண்ம செவ்வட்டக் கூம்பின் ஈர்வை மையம் அடியிலிருந்து $\frac{h}{4}$ உயரத்தில் உள்ளது என தொகையிடல் மூலம் காண்க.




படத்திலுள்ளவாறு 2r ஆரையும் 2h உயரமும் உடைய திண்மக்கூம்பிலிருந்து r ஆரையும் h உயரமுமுடைய திண்மக் கூம்பு வெட்டியகற்றப்படுகிறது. மீதியின் ஈர்வைமையம் அடியிலிருந்து $\frac{15h}{28}$ தூரத்தில் உள்ளது எனக் காட்டுக. வெட்டியகற்றப் பட்ட பின்னர் வெளியானது Km திணிவுள்ள திரவத்தால் நிரப்பப்படு கிறது. தொகுதியின் ஈர்வை மையம் அடியிலிருந்து $\frac{9h}{20}$ தூரத்தில் இருப்பின் திரவத்தால் நிரப்ப முன்னர் பொருளின் திணிவு m எனின் K ஐக் காண்க.

(முற்றும்.....)

**(இணைந்தகணித சென்றவார வினாக்களுக்குரிய விடைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளிவரவுள்ளது)**

# இந்திய ஜனாதிபதி யார்? நாளை மாலை முடிவு!

(புதுடில்லி)
இந்திய ஜனாதிபதி தேர்தல் வாக்குகள் நாளை எண்ணப்படு கின்றன. நாளை மாலை இந் திய ஜனாதிபதி யார் என்ற முடிவு வெளியாகவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று முன் தினம் காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது. ஜனாதிபதி தேர்தலில் நாட்டின் முக்கிய பிரமுகர்கள் வாக்களித்தனர்.

பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பா.ஜ.க தலைவர் எல்.கே. அத்வானி, நிதின் கட்காரி, சுஷ்மா சுவராஜ் என முக்கியஸ்தர்கள் வாக்களித்தனர்.

தமிழகத்தை பொறுத்த வரை பி.ஏ.சங்மாவுக்கு அதிகமான வாக்குகள் கிடைத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


உத்திர பிரதேச மாநில சமாஜ் வாடி கட்சியின் தலைவர் முலா யம் சிங், தவறுதலாக வாக்க ளித்ததாக தெரிவித்தார். இதன் படி அவர் இரண்டாவது முறை யாக வாக்களித்தார்.




இது குறித்து முலாயம் சிங், முதன்முறை வாக்களிக்கும் போது தவறுதலாக சங்மாவுக்கு வாக்களித்தேன். இதன் கார ணத்தினால் திரும்பவும் வாக்க ளித்ததாக தெரிவித்தார்.


நாளை இவ்வாக்குகள் எண் ணப் படுகின் றன. அன்று மாலையே நாட்டின் புதிய ஜனா திபதி யார் என தெரிந்துவிடும்.

# முக்கிய பொறுப்பை ஏற்கத் தயார்



(புதுடில்லி)
காங்கிரஸ் கட்சியிலும், ஆட்சியிலும், மிக முக்கிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள நான் தயார். ஆனால், நான் முக்கிய பொறுப்பை, எப்போது ஏற்றுக் கொள்ள வேண்டும் கட்சி யில் தீவிர பணியை எப்போது செய்ய வேண்டும என்பதை, காங்கிரஸ் தலைவர் சோனியாவும், பிரதமர் மன்மோகன் சிங்கும் தான் முடிவு செய்ய வேண்டும், என, காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் கூறியுள்ளார். இதனால், விரைவில் மத்திய அமைச்சரவை மாற்றம் செய்யப்படலாம் என்றும், அதில், கேபினட் அமைச்சர் பதவி ராகுலுக்கு வழங்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. காங் கிரஸ் பொதுச் செயலர் ராகுலுக்கு, விரைவில் கட்சியிலும், ஆட்சியிலும், முக்கிய பொறுப்பு வழங்கப்படலாம் என, சமீப நாட்களாக செய்திகள் வெளியாகி வந்தன. இதற்கு, கட்சியின் மூத்த தலைவர்களான திக்விஜய் சிங், சல்மான் குர்ஷித் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர்.

# கட்டடத்தில் விரிசல்?



(சென்னை)
சென்னையின் போக்கு வரத்து நெரிசலை குறைக்க மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் வேக மாக நடந்து வருகிறது. இதில் அண்ணா சாலையில் எல்.ஐ.சி. கட்டடம் அருகே பூமிக்கு அடியில மெட்ரோ சுரங்க ரயில் நிலை யம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக இராட்சத எந்திரங்களை கொண்டு 23 மீற்றர் ஆழத்துக்கு பள்ளம் தோண்டப்பட்டு வரு கிறது.

இந்த நிலையில் 14 மாடிக ளைக் கொண்ட எல்.ஐ.சி. கட்ட டத்தில் 11 ஆவது மற்றும் 12-ஆவது மாடி கட்டடத்தில் வெளிப் பகுதியில் லேசான விரிசல் ஏற் பட்டிருந்ததை கண்காணிப்பு அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதுபற்றி எல்.ஐ.சி. நிறுவன பொறியாளர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் பார்வையிட்டு மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகளை அழைத்து வந்து காண்பித்தனர்.

இதையடுத்து மெட்ரோ ரயில்வே பொறியாளர்களும, எல்.ஐ.சி. நிறுவன பொறியா ளர்களும் கூட்டாக சேர்ந்து கட்டிடத்தின் அனைத்து மாடி களிலும் அதன் உறுதி தன்மை குறித்து ஆய்வு நடத்தினர்.

# புதிய அணை; மனு நிராகரிப்பு

(புதுடில்லி)
முல்லைப் பெரியாறில், புதிய அணை கட்டுவதற்கு முன்ன தாக, சுற்றுச்சூழல் குறித்து ஆய்வு நடத்த அனுமதி கோரி, கேரள அரசு சமர்ப்பித்த மனுவை, மத் திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் நிராகரித்து விட் டது.



தமிழக - கேரள எல்லையை ஒட்டி, கேரளா இடுக்கி மாவட் டத்தில் உள்ளது, முல்லைப் பெரியாறு அணை. 116 ஆண்டு பழமையான இந்த அணை, நில நடுக்கங்களால் பாதிக்கப்பட் டுள்ளது. எந்த நேரத்திலும் அணை உடையலாம். எனவே, முல்லைப் பெரியாற்றில் புதிய அணை கட்ட வேண்டும் எனக் கூறி, கேரள அரசு அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

பாதுகாப்பாக உள்ளது: கேரள அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன் றத்தில் வழக்கு தொடரப்பட் டது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், அணையை ஆய்வு செய்ய உயர்மட்டக்குழுவை நியமித்தது. இந்தக் குழு, கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி அறிக்கை தாக்கல் செய்தது. அந்த அறிக் கையில், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக உள்ளது என தெரிவிக்கப் பட்டுள்ளது. இருந்தாலும், புதிய அணை கட் டுவதற்கான முயற்சிகளில், கேரள அரசு தொடர்ந்து ஈடுபட் டுள்ளது. இதன் ஒரு பகுதி யாக, புதிய அணை கட்டுவ தற்காக, அப்பகுதியில் சுற்றுச் சூழல் குறித்து ஆய்வு நடத்த, கேரள அரசு முடிவு செய்தது.

இதற்காக, மத்திய வனம் மற் றும் சுற்றுச்சூழல் துறையிடம் அனுமதி கோரி விண்ணப்பித் தது. ஆனால், விண்ணப்பிக் கும் போது கடைபிடிக்க வேண் டிய வழிமுறைகளை, கேரள அரசு பின்பற்றவில்லை என்ற காரணத்தை கூறி, மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச் சகம், கேரள அரசின் விண்ணப் பத்தை நிராகரித்து விட்டது. இதையடுத்து, புதிய விண் ணப்பத்தை சமர்ப்பிக்க, கேரள நீர் வளத்துறை அமைச்ச கம் முனைப்புடன் செயல்பட்டு வரு கிறது.


# பாலியல் குற்றத்திற்கு ஆயுள் தண்டனை

இந்தியாவில் இனி யாராவது பாலியல் குற்றத்தில் சிக்கினால் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத் திருத்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இதில், பாலியல் குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்கும் வகையில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தை திருத்துவதற்கு ஒப்புதல் தரப்பட்டது.

அத்துடன் ஆசிட் வீசும் நபர்களுக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.10 இலட்சம் அபராதம் விதிக்கவும் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வோருக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கவும் இந்தச் சட்டத் திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.




## முழுமையான....

5 ஆம் பக்க தொடர்ச்சி

தற்பொழுது அவர்களுடைய generation கூட மாறிவிட்டது. எனினும், அவர்கள் ஏற்கெனவே காணிகளை விலைக்கு வாங்கியிருந்தாலும் கூட, அவர்கள் இச்செயற்பாட்டுக்கு முழுமையாக ஒத்துழைக்கும்போது வெற்றிகரமான மீள்குடியேற்றத்தை எங்களால் அங்கு மேற்கொள்ள முடியுமென்று நான் நம்புகின்றேன்.

கௌரவ விநாயகமூர்த்தி அவர்களே, நீங்கள் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கை தொடர்பாக ஓர் ஒத்திவைப்புப் பிரேரணையை இந்த அவைக்குக் கொண்டுவந்ததற்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். நீங்களும் எங்களுடன் இணைந்து மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். ஈடுபடுவீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். நீங்கள் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையையும் அவர்களது துன்பங்களையும் அரசியலாக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களில் சிலர் இதை அரசியலாக அல்லது தேர்தல் கோஷங்களாக பயன்படுத்தினாலும், நீங்கள் அவ்வாறு பயன்படுத்த மாட்டீர்கள். நீங்கள் பாராளுமன்றத்தில் அன்றிலிருந்து அடிக்கடி மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாகக் கேள்விகளையும் அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் அம்பலப்படுத்தி வருகின்றீர்கள். ஆகவே, இடம்பெயர்ந்த மக்களுடைய வெற்றிகரமான மீள்குடியேற்றத்துக்கு நீங்கள் எங்களுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும்,புகைப்படமும் ..............................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தான்சானியாவில் படகு விபத்து; 110 பேரைக் காணவில்லை

## 38 சடலங்கள் மீட்பு



தான்சானியாவில் 290 பேருடன் சென்று கொண்டிருந்த படகு நீரில் மூழ்கியது. இதில் 38 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன, 110 பேரைக் காணவில்லை.

தான்சானியா தலைநகர் தார்-எஸ்-சலாமிலிருந்து ஜான்ஜிபார் தீவுக்குப் பயணிகள் கப்பல் சென்று கொண்டிருந்தது அதில் 251 பெரியவர்கள், 31 குழந்தைகள் மற்றும் 9 கப்பல் பணியாளர்கள் இருந்தனர். ஜான்ஜிபார் அருகே சென்று கொண்டிருந்த போது கப்பல் திடீரென நீரில் மூழ்கியது.

மீட்புக் குழுவினர் இதுவரை 38 பேரின் சடலங்களை மீட்டுள்ளனர். 140 வரையானோர் உயிருடன் மீட்டுள்ளனர். மற்றவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.

எனினும், அவர்களில் பலர் உயிரோடு இருக்கவாய்ப்பில்லை என்று ஜான்ஜிபார் காவல்துறை செய்தித் தொடர்பாளர் முகமது மினா தெரிவித்துள்ளார்.

மேலும் அந்தக் கப்பலில் வெளிநாட்டுப் பயணிகள் 16 பேர் இருந்ததாகவும், அவர்களில் 14 பேர் மீட்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார்.

தான்சானியாவின் ஜனாதிபதி ஜகாயா கிக்வீட் கூறுகையில், இது போன்ற சம்பவங்கள் நம்மை துயரத்தில் ஆழ்த்துகின்றன. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

கடந்தாண்டு செப்டம்பரில் இதே போன்று பயணிகள் கப்பல் மூழ்கியதில் 200 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

படகு விபத்தில் இறந்தவர்களுக்காக ஜான்ஜிபாரில் மூன்று நாள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்


# லண்டனில் கைதானவர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு

உலகம் முழுவதும் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும், ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க இன்னும் சில நாட்களே உள்ளன.

இதனையொட்டி தீவிரவாத தடுப்பு பொலிஸ் அதிகாரிகள் லண்டன் நகரில் கடந்த 5ஆம் திகதி மற்றும் 7ஆம் திகதிகளில் வீடுகளில் அதிரடி சோதனை நடத்தி, பெண் உட்பட சிலரை கைது செய்தனர். அதன் பின் இவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தியதில், தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதுகுறித்து பொலிசார் கூறுகையில், இவர்கள் நான்கு பேரையும் தீவிரவாதிகள் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளோம். ஆனால் கைதான இவர்களுக்கும், ஒலிம்பிக் போட்டிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று தெரிவித்தனர்.

# மனிதனை உண்ணும் மீன்



மனிதனை உண்ணும் மீனையிருடனோ கொனறோ பிடித்துக் கொடுப்பவர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும் என்று சீன அரசு அறிவித்துள்ளது.

சீனாவின் குவாங்ஸி மாகாணத்தில் உள்ளது லியுஜியாங் ஆறு. இங்கு மனிதனை தின்னும் மீன்கள் (பிரானா) இருப்பது தெரிய வந்துள்ளது. தென் அமெரிக்க கடல் பகுதியில் இந்த வகை மீன்கள் ஏராளமாக உள்ளன.

மனிதனை தின்னும் இந்த வகை மீன்கள், லியுஜியாங் ஆற்றில் குளித்து கொண்டிருந்த 2 பேரை கடந்த வாரம் தாக்கி உள்ளது. இந்த மீன்கள், ஆற்றுக்குள் இறங்கும் மனிதர்களின் சதைகளை அப்படியே பிய்த்து உண்ணும் குணம் கொண்டது.

இவ்விடயம் குவாங்ஸி மாகாண அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. உடனடியாக விசாரணை நடத்திய அதிகாரிகள், மனிதனை தின்னும் மீன்களை உயிருடனோ அல்லது சாகடித்தோ பிடித்து கொண்டு வந்தால் ரொக்க பரிசு அளிக்கப்படும் என அறிவித்துள்ளது.

# கணவர் புகை பிடித்தால் மனைவி விவாகரத்து செய்யலாம்


சவுதி அரேபியாவில் புகை பிடிக்கும் கணவர்களை விவாகரத்து செய்ய பெண்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் புகை பிடிக்கும் கணவருக்கெதிராக ஒரு பெண் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கில் நீதிபதி பரபரப்பு தீர்ப்பு வழங்கினார்.

திருமணத்துக்கு பின்பு தான் தனது கணவர் புகை பிடிப்பவரா என்பதை மனைவி அறிகிறார். கணவர் புகை பிடிப்பதன் மூலம் அவரது உடல் நலம் மிகவும் பாதிக்கப்படுகிறது. அவரது இதயம், நுரையீரல்கள் பாதிக்கப்பட்டு நோய் ஏற்படுகிறது.

எனவே, புகை பிடிக்கும் கணவர்கள் மீது பெண்கள் வழக்கு தொடரலாம். குறிப்பாக விவாகரத்து வழக்கு கூட தொடர அவர்களுக்கு உரிமை உண்டு எனவும் அந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

# சூரிய மின்சாரப்பேருந்து



சூரிய ஒளியின் மூலமாக இயங்கும் பேருந்து சேவையை தொடக்கி, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது சீனா.

சீனாவின் ஹெய்லான்ஜியாங் மாகாணத்தில், லாங்குவா நியூ எனர்ஜி ஆட்டோமொபைல் நிறுவனத்தினரால் சோலார் சக்தியின் மூலம் இயங்கும் பேருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த பேருந்து 100 பயணிகளை கொண்ட முதல் சேவையை, நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள நகரத்தில் தொடங்கி உள்ளது.

சோலார் சக்தியை பயன்படுத்துவதன் மூலம் லித்தியம் பேட்டரியின் ஆயுட்காலம் 35 சதவீதம் வரை அதிகரிப்பதாகவும், இந்த பேருந்து ஒரு கிலோமீட்டருக்கு 0.6 முதல் 0.7 கிலோவாட்ஸ் சக்தியை பயன்படுத்துவதாகவும் தொழில்நுட்ப வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

# பச்சைகுத்தியவருக்கு 200 கசையடி பரிசு

சவுதி அரேபியாவில் பெண்களுக்கு பச்சைக்குத்திய லெபனானியருக்கு 200 கசையடிகள் வழங்கும் அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சவுதி அரேபியாவில் திருமணம் செய்யாத ஆண்களும் பெண்களும் பேசுவதற்கு தடை உள்ளது. மேலும் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் அந்நாட்டில் அதிகம் உள்ளது.

இந்நிலையில் லெபனான் நாட்டைச் சேர்ந்த இந்நபர், சவுதி பெண்களுக்கு பச்சை குத்துவது, தலைமுடிக்கு சாயம் பூசுவது போன்ற பணிகளில் இரகசியமாக ஈடுபட்டு வந்திருக்கின்றார்.

இவர் குறித்த தகவல் சவுதி பொலிஸாருக்கு தெரியவர, வாடிக்கையாளரின் கார் ஓட்டுநர் போல நடித்து இந்நபரை கைது செய்தனர். இவருக்கு ஜெட்டா மாவட்ட நீதிமன்றம் ஒரு வருட சிறைத்தண்டனையுடன் 200 கசையடிகள் வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

# எயிட்ஸ் நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி




உலகம் முழுவதிலும் சுமார் மூன்று கோடியே 40 இலட்சம் பேர் எயிட்ஸ் நோயை உருவாக்கும் எச்.ஐ.வி கிருமிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா மதிப்பிட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு எயிட்ஸ் நோயால் 20 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 2010ஆம் ஆண்டு 18 இலட்சமாகவும், 2011ஆம் ஆண்டு 17 இலட்சமாகவும் குறைந்துள்ளது.

இதற்கு காரணம் எயிட்ஸ் நோயாளிகள், புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு மருந்துகளை எடுத்துக் கொள்வதே ஆகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில், குறைந்தபட்ச வருமானமுள்ள நாடுகளில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட 80 இலட்சம் பேர், எயிட்ஸ் நோய எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்கிறார்கள். இது அடுத்த 2015 ஆம் ஆண்டுக்குள் ஒரு கோடியே 50 இலட்சம் பேருக்கு வழங்கப்படும்.

எச்.ஐ.வி வைரஸ் கிருமிகள் பரவுவதை தடுக்கும் நடவடிக்கைகளுக்காக கடந்த வருடம் 16 .8 பில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது. இதில் பாதி தொகை அமெரிக்கா மற்றும் பன்னாட்டு ஆதாரங்களிலிருந்து வந்துள்ளது.

எச்.ஐ.வி சிகிச்சை பெறுவோருக்கு வசதியாக மிகக் குறைந்த விலையில் அனைத்து மருந்துகளையும் உள்ளடக்கிய ஒரு மாத்திரையை வழங்குவது குறித்து மருந்து நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

உலகில் எச்.ஐ.வி வைரஸ் கிருமிகளால் அதிகம் பாதிப்புக்குள்ளான நாடான கென்யா, நைஜீரியா மற்றும் தென் ஆப்பிரிக்க நாடுகளில் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது.

வடக்கு ஆப்பிரிக்கா, மிடில் ஈஸ்ட், கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் எச்.ஐ.வி வைரஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்ட எயிட்ஸ் நோயாளிகளின் இறப்பு விகிதம் அதிகரித்துள்ள நிலையில், ஆசியாவில் அதே நிலையில் நிலையாக 330,000 பேர் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் இடைத் தேர்தல் கிலானியின் மகன் வெற்றி



பாகிஸ்தானில் முல்தான் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில், முன்னாள் பிரதமர் கிலானியின் மகன் அப்துல் காதிர் கிலானி வெற்றி பெற்றுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் கீழ் கிலானி தகுதி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரது தொகுதியில் தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் சார்பில் போட்டியிட்ட, கிலானியின் மகன் அப்துல் காதிர் கிலானி 64,628 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பாகிஸ்தான் முஸ்லிம் லீக்(நவாஸ் ஷெரீப்) மற்றும் தெஹ்ரிக்-இ- இன்சாப் கட்சிகளின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட் பாளர் சௌகத் போஸன் 60,532 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார்.

# நெடுந்தீவு மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

யாழ். நெடுந்தீவு மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் 2012 வித்தியாலய மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் உயர்தரமாணவர் ஒன்றியத் தலைவர் செல்வன் டா.தேவராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளரும் நெடுந்தீவு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளருமாகிய தானியேல் றெக்சியன் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கோட்டக் கல்வி அதிகாரி க.அரசரட்ணம், தென்னிந்திய திருச்சபை போதகர் வண. ஜே.தாவீது அடிகளார் மற்றும் நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் ஏ.சச்சிதானந்தம் மற்றும் நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன், நெடுந்தீவு தபாலதிபர் இராசரட்ணம், நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபர் திருமதி சா.கிருஸ்ணதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையாற்றும்போது,

பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்கள் உயர்தரச் சித்தி எய்த வாழ்த்துக்களை தெரிவித்தார். மாணவர் சமுதாயம் நற்பிரஜைகளாக இச் சமுகத்துக்கு எடுத்துக்காட்டானவர்களாக வாழ வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பெருந்தொகையான பெற்றோர், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நெல் களஞ்சியத்தினை சேதப்படுத்திய யானை

(வவுனியா)

வவுனியா - ஆறுமுகத்தான் புதுக்குளத்தில் உள்ள வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான நெல் களஞ்சிய சாலையை கடந்த செவ்வாய்க்கிழமை யானைக்கூட்டம் தாக்கி அங்கிருந்த பல இலட்சம் பெறுமதியான நெல் மூடைகளை சேதப்படுத்தியுள்ளதாக வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இரவு வேளை யானைகள் நெற்களஞ்சியசாலையின் பிரதான வாயிற்கதவினை உடைத்து அதனூடாகச் சென்று அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகளை சேதப்படுத்தியதுடன் கட்டடத்திலும் சேதத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

2011 ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் ஊடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 48 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைத்திருந்த இக்களஞ்சிய சாலையில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரின் முற்பணத்தில் விவசாயிகளிடமிருந்து சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (160)

## சடலம்...


சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். மீட்கப்பட்ட சடலம் தொடர்பான விபரங்கள் கிடைக்கப்பெறாத பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடற்படையினர்...

இதனைத் தெரிவித்தார். மேலும் இச்சந்திப்பில் வடக்கில் அரசாங்கம் காணிகள் சுவீகரிப்பது தொடர்பாகவும், வடபகுதியில் இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகவும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் உரையாடியுள்ளனர். (02)

## மன்னார்...

நீதவான் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் சட்டத்தரணிகளும் நீதவான்களும் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





வட மாகாண சபையின் அபிவிருத்தி நிதியின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் பழைய பூங்கா நேற்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (02,பா)

## காங்கேசன்துறைக்கு...

பாதை புனரமைப்பு 2013 இல் முடிவடையும். அதே போல பளைக்கும் தலைமன்னாருக்குமான ரயில் பாதை புனரமைப்பும் நிறைவடையும். காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. பலாலி விமான நிலைய ஓடுபாதை அபிவிருத்தி செய்யப்படுகின்றது. தெற்கு ரயில்வே செயற்திட்டத்தை இன்னும் ஆறு மாதங்களில் நிறைவு செய்து அரசிடம் கையளிக்கவுள்ளோம். பலாலி விமான நிலைய ஓடு பாதை உள்ளூர் தேவைகளுக்கும், பிராந்திய தேவைகளுக்கும் பயன்படுத்தும் வகையில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

மற்றுமொரு பெரிய திட்டமாக வீடமைப்புத் திட்டம் தொடங்கியுள்ளது. கடந்த யூலை மாதம் 6000 வீடுகள் பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 1000 வீடுகள் பூர்த்தியடையும். கடந்த யூலை 13 ஆம் திகதி 43ஆயிரம் வீடுகள் அமைப்பதற்காக 4 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளோம். இது இவ்வருடத்திற்குள் பூர்த்தியடையும். அத்துடன் இந்த வருட இறுதிக்குள் வலுவற்றோருக்கான வீடமைப்புத்திட்டமாக 6000 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கடந்த வாரம் உயர்கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டோம். கிளிநொச்சியில் பொறியியல் பீடம் அமைக்க 600 மில்லியன் ருபா ஒதுக்கியுள்ளோம். அத்துடன் விவசாய பீடமும் கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

இந்தியாவிலுள்ள முன்ன்ணி நிறுவனங்களுடன் கட்டட அபிவிருத்திகள் மற்றும் வேறு சில அபிவிருத்திகள் தொடர்பாக உடன்பாடுகளை ஏற்படுத்தியுள்ளோம். இதற்கான முயற்சிகளை செய்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பாராட்டுகின்றேன்.

79 பாடசாலைகளுக்கான அபிவிருத்திகள் இம்மாத இறுதிக்குள் நிறைவடையவுள்ளன. இலங்கையில் உள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றோம். இதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் பயன்படுத்த வேண்டும்.

அச்சுவேலியில் சிறுகைத்தொழில் முயற்சிகளில் பங்கேற்கவுள்ளோம். இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஆர்வமாகவுள்ளார்.

பொருளாதார முன்னேற்றம் பிராந்திய அடிப்படையில் வடமாகாணத்தில் வளர்ச்சியடைய வேண்டும். இது இந்தியாவுடன் தொடர்புபட்டது. குறிப்பாக தென்னிந்தியாவுடன் அதிகமாக தொடர்புபட்டது. கொழும்பில் இருந்து 100 இற்கு மேற்பட்ட கம்பனிகள் இவ் வேலைத்திட்டங்களில் ஈடுபடவிருக்கின்றன. இதற்கு காரணம் இங்கு பயன்படுத்தப்படாத வளங்கள் நிறையவுண்டு.

நான் உறுதியாக சொல்கின்றேன். இங்கு அபிவிருத்தி நன்றாக நடைபெறுகின்றது. ஒளிமயமான வாழ்விற்கு அபிவிருத்தி அவசியம். ஆனால் அபிவிருத்தி மட்டும் போதாது ஐக்கியமும் தேவை. அதற்கு எல்லோருக்கும் சமவுரிமை, சமபங்கு என்பன தேவை. இலங்கை ஒரு அழகான நாடு. திறமையும் வளமும் மிக்க நாடு. இந்நாடு ஐக்கியமாக இருக்கும் போது தெற்காசியாவில் மட்டுமல்ல அதற்கு அப்பாலும் சிறப்பான நாடாகவிருக்கும்.

இந்தியா எல்லா உதவிகளையும் செய்யும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நிமலரூபனின்....

நல்லடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று நிமலரூபனின் பெற்றோர் தாக்கல்செய்திருந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளதாக மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

சட்டத்தரணிகளின் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தினால் நீதிமன்றச் செயற்பாடுகள் முடங்கியிருக்கும் நிலையிலும், இந்த குறித்த மனுவை விசேட காரணம் கருதி, நீதிபதியின் பணி பீடத்தில் வைத்தே நேற்றைய தினம் நீதிபதி விசாரித்ததாக சாலிய பீரிஸ் குறிப்பிட்டார்.

இதன்போது, அரச தரப்பு சட்டத்தரணி முன்வைத்த நிபந்தனைகளுக்கு நிமலரூபனின் பெற்றோர் இணங்கியதை அடுத்து, அவரது சடலத்தை நாளை மறுதினம் திங்கட்கிழமை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உச்சநீதிமன்றம் மகர நீதவான் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது.

## பனை ஆராய்ச்சி...

பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களை பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறையாக மாற்றுவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்தியில் பனையின் பங்களிப்பை அதிக ரிப்பதுடன் வேலை வாய்ப்பு, சுயதொழில் வாய்ப்பு, அந்நியச் செலாவணி என்பவற்றை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் இந்த ஆராய்ச்சி நிலையம் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா, துணைத்தூதுவர் மகாலிங்கம் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, சமூக சேவை அமைச்சின் செயலாளரும் முன்னாள் யாழ். மாவட்ட அரச அதிபருமான இமெல்டா சுகுமார், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், வடமாகாண சபையின் பிரதம செயலாளர் விஜயலட்சுமி, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் பிரதேச செயலர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (02)

## குடாநாட்டிற்கு...

நிறுவனத்தின் தேவை ஏற்பட்டது. இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் புனரமைப்புக்காக திறைசேரியில் 44 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது இதற்கான மேலதிகமான நிதியினையும் பல்வேறு தொழில் நுட்ப உதவிகளையும் இந்தியா வழங்கியுள்ளது. அத்துடன் இலங்கையில் எங்கும் இல்லாத வகையில் புதிய ஆராய்ச்சி உபகரணங்களை இந்தியா வழங்கியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

இந்த் உதவிகளுக்காக இலங்கை மக்கள் சார்பாகவும், குறிப்பாக வடபகுதி மக்கள் சார்பாகவும் இந்திய அரசாங்கத்திற்கும், இந்திய மக்களுக்கும் நாங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அனைத்து அபிவிருத்திகளுக்கும் இந்திய அரசாங்கம் வழங்கி வருகின்ற உதவிகளை எங்களால் மறக்க முடியாது.

யுத்தம் நடந்த காலப்பகுதியில் காயமடைந்த மக்களுக்கான மருத்துவ உதவிகளையும் யுத்தத்திற்குப் பின்னரான மீள்குடியேற்றம், அபிவிருத்தி போன்றவற்றிற்கு பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது. அத்துடன் இந்தப் பனை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் இதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (02)

## முடங்கியது....


மன்னார் நீதவான் அந்தோனிப்பிள்ளை ஜுட்சனுக்குத் தொலைபேசி மூலமாக அச்சுறுத்தல் விடுத்து, நீதிமன்றத்தின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் சட்ட மா அதிபரிடம் கோரியுள்ளது. இந்த விடயம் குறித்து இலங்கை நீதிபதிகள் சங்கத்தினரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

இதேவேளை, மன்னார் நீதிமன்றத்தின் மீதான தாக்குதல் மற்றும் நீதிபதிகள் மீதான அச்சுறுத்தலைக் கண்டித்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இரண்டாவது நாளாகவும் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களின் ஆர்ப்பாட்டமும் பணிப்புறக்கணிப்பும் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரனுடைய வீட்டின்மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் யாழ். சட்டத்தரணிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அவரது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சட்டத்தரணிகள், நீதிமன்ற ஊழியர்களுடன் பொதுமக்களும் கலந்து கொண்டு கோஷங்களை எழுப்பியுள்ளனர். (பா,116)

# யாழ்.பல்கலையின் ஏற்பாட்டில் போருக்கு பின்னரான சர்வதேச மாநாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் போருக்குப் பின்னரான அபிவிருத்தி எனும் இரண்டு நாள் ஆய்வு மாநாடு நேற்றைய தினம் யாழ்.நகரிலுள்ள ரில்கோ விடுதியில் ஆரம்பமானது.

யாழ்பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்விற்கு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க பிரதம அதிதியாகவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா, களனிப் பல்கலைக்கழ கத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சரத் அமுணுகம ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டு உரையாற்றினர். இவர் களுக்கான நினைவுப் பரிசில்களை ஏற்பாட்டாளர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

தொடர்ந்து ஆய்வு மாநாடு எட்டுப் பிரிவுகளாக நடைபெற்றது. இம்மாநாட்டில் இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனம் சார்ந்த 650 இற்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் கலந்துகொண்டுள்ளதோடு 300இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டு ஆய்வரங்கு நடைபெறுகிறது. (பா,02)

## மாணவியைக் கடத்த முயன்ற இளைஞன் கத்திக் குத்தில் பலி

(கொழும்பு)

பாடசாலை மாணவியொருவரைக் கடத்துவதற்கு முயற்சித்ததாகக் கூறப்படும் 18 வயது இளைஞன் அந்த மாணவியின் தந்தை நடத்திய கத்திக் குத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் எஹலியகொட தேசிய பாடசாலைக்கு முன்னால் குறித்த இளைஞன் கத்தியை காட்டி பயமுறுத்தி மாணவியை கடத்துவதற்கு முயற்சித்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மாணவியின் தந்தை கத்தியை பறித்து குறித்த இளைஞனை குத்தியுள்ளார்.

சம்பவத்தில் இளைஞன் உயிரிழந்ததுடன், மாணவியின் தந்தை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரவித்தனர்.

கடந்த சில நாட்களாக உயிரிழந்த இளைஞனால் அந்த மாணவிக்கு பல்வேறு விதத்திலும் இடையூறுகள் விளைவிக்கப் பட்டதாகப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

## மாணவி துஷ்பிரயோகம்; ஆசிரியர் கைது

பாடசாலைக்குள் மாணவியொருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் ஆசிரியரொருவர் நெளுவ பொலிஸாரால் கைது கைது செய்யப்பட்டுள்ளார்.

பெற்றோரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு மேலதிக வகுப்புக்கள் நடத்துவதாகத் தெரிவித்து, குறித்த மாணவியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

## நீதவான் மீது அச்சுறுத்தல் அமைச்சர் ஹக்கீம் கண்டனம்

(மன்னார்)

மன்னார் நீதவான் அச்சுறுத்தப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர் என்ற வகையிலும் நீதி அமைச்சர் என்ற வகையிலும் குறித்த சம்பவத்தினை தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தினேன். அத்துடன் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருடன் நேரடியாக மன்னாருக்கு விஜயம் செய்து சட்டத்தரணிகளுடன் பேச்சு நடத்தவிருந்தேன் என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்

எனினும் சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமையால் அங்கு செல்ல முடியாமலுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்தி, சுமுகமான நிலையினை உருவாக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கைப் படகுகள் தீ வைத்து எரிப்பு

இலங்கை, இந்தோனேஷிய அகதிகளை ஏற்றிச் சென்ற போது, அவுஸ்ரேலிய கிறிஸ் மஸ்தீவில் இருந்து 20 கடல் மைல் தூரத்தில் வைத்து முற்றுகையிடப்பட்ட இரண்டு படகுகளை அவுஸ்ரேலியக் கடற்படையினர் தீயிட்டு எரித்துள்ளனர்.

51 இலங்கை அகதிகளைக் கொண்ட படகு ஒன்று நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் தீவை அடைந்திருந்தது. மற்றொரு படகு இந்தோனேஷியாவில் இருந்து 65 அகதிகளை ஏற்றி வந்திருந்தது.

அகதிகள் அனைவரும் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்ட பின்னரே, கடற்படையினரால் இப்படகுகள் தீயிட்டு அழிக்கப் பட்டன. இவை எரிந்து கொண்டிருந்த போது மற்றொரு அகதிகள் படகு இலங்கையில் இருந்து 25 அகதிகளுடன் கிறிஸ் மஸ்தீவை அடைந்தது.

அகதிகளை ஏற்றிவரும் படகுகளை அவுஸ்ரேலியக் கடற்படை எரிப்பது வழக்கமான செயற்பாடு என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


## மன்னார் மீனவர்களுக்கு ஆதரவாக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

மன்னார் முஸ்லிம் மீனவர்களின் மீன் வாடி சம்பந்தமாக மன்னார் மாவட்ட நீதவான் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மன்னார் முஸ்லிம் மீனவர்களுக்கு ஆதரவாக நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த வகையில், யாழ்ப்பாணம் புதிய மொஹிதீன் ஜும்மா தொழுகையின் பின்னர் யாழ். முஸ்லிம் மக்கள், மன்னார் முஸ்லிம்களுக்கு நீதி வழங்க வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் பெரும் தொகையான முஸ்லிம் மக்கள் சுலோகங்களை ஏந்தியவாறு வீதியில் இறங்கிக் கோஷமிட்டனர்.

ஆன்மீகவாதிகளே, அரசியல் வாதிகளாக மாறவேண்டாம், றிசாட் அமைச்சரை ஓரங்கட்டி மீள்குடியேற்றத்தைத் தடுக்க வேண்டாம். மன்னார் முஸ்லிம் மீனவர்களுக்காகக் குரல் கொடுப்போம். அவர்களையும், அவர்களின் காணிகளுக்காகவும் போராடுவோம் போன்ற சுலோகங்களுடன் ஊர்வலம் செல்ல முயன்ற போது பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.



வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை பள்ளிவாசலில் தொழுகையை முடித்துக் கொண்டு வீதியில் இறங்கிய முஸ்லிம்கள் புலிகள் செய்த அதே வேலையை நீயும் செய்யாதே, ஆயர் அவர்களே அரச நிர்வாகத்தில் தலையிடாதே, முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை தடை செய்யாதே, தமிழ், முஸ்லிம், சிங்கள இனப்பாகுபாடின்றிச் சேவை புரியும் அமைச்சர் றிசாட் மீது பழி சுமத்தாதீர், ஆயரே இன. ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் சீர்குலைக்காதே, சிறுபான்மைக்கு குரல் கொடுக்கும் அமைச்சரைக் காப்போம் என்னும் வாசகம் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் கோஷங்களையும் எழுப்பினர்.

இதேவேளை, மன்னார் நீதிபதியை அமைச்சர் றிசாட் பதியுதீன் அவமதித்ததாக வடபகுதி சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (105,05,16)

## 120 ரயில்கள் இறக்குமதி

(கொழும்பு)

இலங்கைக்கு சீனாவின் கிழக்கு மாகாணத்திலிருந்து 120 ரயில்கள் நேற்று முன்தினம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த ரயில்கள் ஒரு மணி நேரத்திற்குள் 120 கிலோ மீற்றர்கள் வரை பயணத்தினை மேற்கொள்ளக் கூடியவை. CSR சிபங் நிறுவனத்தினால் இந்த ஏற்றுமதி நடவடிக்கை இலங்கைக்கு மூன்றாவது தடவையாக கிடைக்கப் பெறுகிறது.

CSR சிபங் நிறுவனத்தினால் இலங்கைக்கு 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 180 ரயில்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இடறி விழுந்தவர் மரணம்

(வேலணை)

புங்குடுதீவு ஆலடிச் சந்தி பிள்ளையார் கோவிலடியில் குடி போதையில் சென்றவர் இடறி விழுந்து மரணமடைந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை வேளையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா சேனாதிராசா (வயது-51) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (85)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் நடராசா

நயினாதீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தரான நாகலிங்கம் நடராசா நேற்று வெள்ளிக்கிழமை (20.07.2012) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னப்பிள்ளையின் அன்பு மகனும், குணபூசணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இந்துமதி (முன்னாள் கிளிநொச்சி உ.அ.அதிபர்), திருமதி திலகவதி சிவசக்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி கனகம்மா, சரஸ்வதி, சௌந்தரம், பெரியநாயகி, ஆறுமுகம், கதிரேசபிள்ளை (தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் மைத்துனரும், சுரனுதா (ஆசிரியர், கல்கமுவ) சோபிதா, மயூரன் (ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்) நந்தனன் (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), பிரணவன் (மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலேஸ்வரன் (கொங்கொங்), நந்தகுமார் (வர்த்தகர், கொழும்பு), சசிலா (ஆசிரியர், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சி.ந.கருணாகரகுருமூர்த்தி,
அகில இலங்கை சமாதான நீதவான்,
வேலணை பிரதேச சபை உறுப்பினர்.
0776953782

தொடர்புக்கு :
0778013130
0212225740

(C/1592)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.